போன் நெ. 15. விலை 2 அணா. RGD No. 4648

# திராவிடநாடு

ஆண்டு சந்தா ரூ. 7—0—0

மலர் 13 | 6—2—55 | இதழ் 31

# என்ன கிடைத்தது?

"என்ன கிடைத்தது? ஏடா, மூடா! செத்த கட்சி என்று செப்புவீர்களே காங்கிரசை! இப்போது என்ன சொல்லமுடியும்?"

*

புது ஒலியுடன் கேட்கிறார், காங்கிரஸ் நண்பர். ஆவடி விழாவில், கூடியோர் ஐந்து லட்சம் என்கிற ஆனந்தம் அவருக்கு. காங்கிரஸ், 35 கோடி மக்கள் முழுதுக்கும் ஓர் சங்கம். அதன் 'அகில' மாநாட்டுக்கு வந்தோர், ஐந்து லட்சம்—'அந்த வட்டாரத்து' ஏடுகளின் விபரப்படி. சென்னையின் மக்கள் தொகையே இருபது லட்சமாம். இது கிடக்கட்டும் ஒருபுறம். நண்பர், காங்கிரசுக்கு உயிர் இருக்கிறதெனும் உண்மை உணர்த்தப்பட்டுவிட்டது என்கிறாரே—இதோ ஒரு அவலக் குரல்! இருவர் பேசுகின்றனர்—ஆவடியில்தான்!

"தேர்தலில் வேலை செய்ய போதிய ஆட்களும், வேண்டிய வசதிகளும் இல்லாத குறை எங்களைக் குடைகிறது"

கூறுவது நாமல்ல; கோபால ரெட்டி! சஞ்சீவி ரெட்டி! முழக்கம் கேட்கிறதே, அதோ ஆந்திரத்தில், அங்குதான் இந்த நிலை. "மற்றக் கட்சிகள் எத்தனையோ, துண்டு அறிக்கைகள் போட்டுவிட்டன. பல ஊர்களிலும் பிரச்சாரம் செய்யத் துவங்கிவிட்டன. ஆனால், நாங்களோ, இன்னும் ஒரு சாதாரணத் துண்டுப் பிரசுரம்கூடப் போடவில்லை" ஏன்? போடக் காசில்லாததாலா? செச்சே! — காங்கிரசுக்கா காசுப் பஞ்சம்! அது அல்ல. நினைத்தால் சுழல எத்தனையோ அச்சியந்திரங்கள் இருக்கின்றன. எனவே, அது அல்ல காரணம். போட்ட 'நோட்டீசு'களைக் கொடுக்க முன்வருவோர் இல்லையாம்! காங்கிரசில்தான் — கவனம்! கவனம்! அடித்த நோட்டீசைக் கொடுக்க ஆளில்லையாம். அப்படியென்றால் காங்கிரசே 'சைபர்' ஆகிவிட்டதென்று கூறிக் கெக்கலிக்கவில்லை, நாம். ஆட்கள் உண்டு; எத்தனையோ 'கக்கன்'கள் இல்லையா! ஆனால், அவர்கள் இதுபோன்ற வேலைகளைச் செய்ய முன்வரவில்லையாம். இதெல்லாமா...! — என்று நினைக்கின்றனராம். அரசாங்கக் காரியாலயத்துக்கு ஓடுவதும், அமைச்சர்களின் தயவை நாடுவதும், கருணை புரியாதோர்மீது கணைகளைப் பூட்டுவதும், 'கதர்' காட்டி மிரட்டுவதுமே தமது காரியங்கள் எனக் கருதுகின்றனரே அன்றி, 'இதுபோன்ற வேலைகளா? இதற்கு நாங்களா?' என்று அலட்சியத்தோடு கேட்கின்றனராம். துயரத்தோடு தெரிவிக்கின்றனர், ஆந்திரத் தலைவர்கள். தேர்தலில் போட்டியிட மற்றக் கட்சிகளின் 'பலமும்' வேண்டுமென்று பணிந்த பின்பும், நிலை இதுவாம்! கூறுகின்றனர், இவர்கள். குதூகலப்படும் நண்பர்களின் பார்வைக்கு வைக்கிறோம்.— கொடி கட்டிப் பறக்கவிடலாம்; கூட்டத்தைக்கண்டும் பிரமிக்கவைக்கலாம். ஆனால், கொள்கை எனும் குருதி ஓட, அதற்காகப் பாடுபடும் ஆர்வமுள்ளோர் ஏது? எங்கே? விரல்விட்டுக் காட்டமுடியுமா?

*

**"ஏடா! என்ன நினைத்துக்கொண்டாய், எம்மை? இப்படியொரு மந்த நிலை, எம்மிடம் இருக்கிறது; உண்மையை மறைக்க விரும்பவில்லை. அதனால்தானே, மாநாட்டிலேயே, ஒவ்வொரு காங்கிரஸ் தொண்டனும் ஊழலுக்கு ஆளாகாமல் பணிபுரியவேண்டும் என்று வலியுறுத்தி தீர்மானம் போட்டிருக்கிறோம். படித்தாயோ விபரமாக...!"**

*

பதில் இது, எனக் காட்டுவர் தோழர்கள்! உண்மைதான், அப்படியொரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது, ஆவடியில், உண்மைதான். ஆனால் அதைக் கேட்டபோது, அல்குராய் சாஸ்திரி எனும் வடநாட்டு உறுப்பினர் ஒருவர் என்ன சொன்னார் தெரியுமா? ஏடுகள், அதனைப் போடவில்லை! சீறினார், சிம்மமாக.

"தலைவர்களே! தவறுகளைத் தொண்டர்கள் தலையில்போட்டு தப்ப நினைக்காதீர்கள். காங்கிரசிலும் ஊழலிருக்கிறது, என்று நீங்களே தீர்மானம் போடுவது எதிர்க்கட்சிகள் இத்தனை நாளாகக் கூறி

வருவதை ஊர்ஜிதம் செய்வது போலிருக்கிறது. இதை நான் பலமாகக் கண்டிக்கிறேன்! அகில உலகமே போற்றும் நமது நேரு அவர்கள் தலைமையின் கீழ் இருந்தும், இவ்வளவு ஊழல்கள் ஏற்பட்டது என்றால் யார் காரணம்? தொண்டர்கள் மட்டுமா! தலைவர்களும் தான்! எங்களைக் கண்டிக்கிறீர்களே, நீங்கள் என்ன யோக்யமாக நடந்துகொள்ளுகிறீர்கள்?"

கேட்டார், அவர்! காரசாரமாகவே கேட்டார்! இன்னொருவர் காளிபாதமுகர்ஜி என்பவர், சொன்னார் "தேர்தலில் ஜெயிக்கவேண்டுமென்பதற்காக, பீகாரில், வோட்டர்களுக்கு கள்ளும் சாராயமும் 'சப்ளை'" செய்யப்பட்டதாக! காங்கிரஸ் கமிட்டியில்தான் கேட்டார்!! "இது போன்ற அக்கிரமங்களை நாமே செய்கிறோம். ஆனால், பிறர் மீது பழிபோடத் தயங்குவதில்லை" என்று கர்ஜித்தார்! அவர்கள் மட்டுமல்ல, அன்பர் நேருவே கூடச் சொல்லியிருக்கிறார், "காங்கிரசுக்குள்ளிருக்கும் ஏராளமான ஊழல்களை, என்னுடைய சொந்த அனுபவத்தின்மூலம் அறிவேன். இதற்கு மிகப் பெரிய காங்கிரஸ்காரர்கள் கூட காரணஸ்தர்களாகும்"

*

"இவைகளைமட்டும் எடுத்துக் காட்டி கெக்கலிக்க எண்ணுகிறாயோ, ஏடா! எங்கள் நேரு, சொன்னாரே, 'காங்கிரஸ் அரசாளத் துவங்கியதும். ஏராளமானோர் காங்கிரசுக்குள் வந்துவிட்டார்கள். காங்கிரசின் கொள்கைக்காக அல்ல; வேறு பல காரணங்களுக்காக. இதனால் சுயராஜ்யப் போராட்டத்தின்போது பாடுபட்ட பல உண்மையான தொண்டர்கள் இருக்குமிடம் தெரியாமல் போய்விட்டார்கள்" என்று. எங்களுக்கு மட்டும், இதெல்லாம் தெரியாமலா இருக்கிறது?

*

என்று கேட்கக் கூடும், தேசிய நண்பர்கள். உண்மையே. அல்குராயின் கண்டனத்துக்கு நேருவிடமிருந்து கிடைத்த அன்பொலி, இது. சாதாரண முகர்ஜியிலிருந்து சகலகலா பண்டிதரான நேரு வரையில், காங்கிரசுக்குள் புகுந்திருக்கும் 'கெட்ட இரத்தம்' எதுவென்பதைச் சரியாகத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்! மகிழ்ச்சியே—எந்தளவுக்குத் தெரிந்திருக்கவேண்டுமோ அதைவிட அதிகமாகவே தெரிந்துவைத்திருக்கிறார், அன்பர் நேரு. அவரே சொல்லுகிறார்—கட்சி மெம்பர்களிடமிருந்து கட்டணம் ரூபாய் 10-வசூலிக்கக் கூடாது அதனால் ஏழைகள் எங்கே போவோம் என்கிறார்கள். அவர்களைக் கேட்கிறேன். நமது கட்சியின் வேலைகளுக்கு, நமது தொண்டர்களிடம் வசூலிக்காமல் பணக்காரர்களிடம் போயா பல்லைக் காட்டி நிற்கச் சொல்லுகிறீர்கள்! அதை நான் கொஞ்சம் கூட விரும்பவில்லை. இப்படி பணக்காரர்களை நாடினால் பிறகு அவர்கள் சொல்லுகிறபடி ஆடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். அரசியலில், உழைப்பின் மூலம் உயர்வோனை, பணத்தின் மூலம்,வாங்கும் 'எஜமானன்' ஆவோர் இருப்பது கூடாது!' என்று கூவியிருக்கிறார்.

ஐசனோவர் நாடி எப்படியிருக்கிறது, சர்ச்சிலின் உள்ளப்போக்கு எவ்விதம், மாலெங்கோவின் மனவளம் என்ன என்றெல்லாம் அறியக்கூடிய ஆற்றல்பெற்றவரல்லவா, அவருக்குத் தன் கட்சியிலுள்ள நிலைமையும், அங்கே தீய சக்திகள் புகும்முறைகளும் தெரியாமலா, இருக்கும்! நன்றாகவே, தெரிந்திருக்கிறது-பிறரைவிட தெளிவாகவும் புரிந்திருக்கிறது. ஆனால், பலன்! இதோ அன்பர் காமராஜ் நன்றி தெரிவிக்கிறார். மகாநாட்டுக்கு உதவியவர்களுக்கு பெயர்களைச்சொல்லியே, நன்றிதெரிவிக்கிறார். அந்த பாக்கியத்துக்கு ஆளானது யார்—வடபாதிமங்கலம், ராமனுத்கோயங்கா, வாசன், சம்பந்தம், மேத்தா!! இவர்கள் எல்லாம், யார்? தெரியாதா நேருவுக்கு! ஆவடியில் நடைபெற்ற மாநாடு, இவ்வளவு, அமர்க்களமாக நடைபெற,

(13-ம் பக்கம் பார்க்க)

## நெல் வகை 60

குருவை
ஆனைக்கொம்பன்
இலுப்பைப் பூச்சம்பா
ஈர்க்குச் சம்பா
கருடன் சம்பா
கப்பம் சம்பா
கறுப்புக் கார்
கோணர் குருவை
கல் குருவை
கருங் குருவை
குத்தாலை
காட்டுக் குத்தாலை
காட்டழி வாணன்
சிவப்பு சிறுமணியன்
சடைச் சம்பா
சிகப்புச் சம்பா
சீரகச் சம்பா
சன்ன சம்பா
சிகப்பு ஒட்டன்
செப்புலிப் பிரியன்
செங்கார்
செங்குருவை
சாம்பல் வாரி
செம்பாளை
தங்கச் சம்பா
தட்டைச் செம்பாளை
தில்லை நாயகம்
நறுக்குச் சம்பா
நீலன் சம்பா
பக்கிரி சம்பா
பழைய பவுன் சம்பா
பொடித்தில்லை
பிசாணம்
புனுக்குச் சம்பா
பூங்கார்
பெருங்கார்
பொன்கம்பிச் சம்பா
மல்லிகைச் சம்பா
மணல் கார்
மருதூர் வாசனை
மிளகி
முத்து வெள்ளை
மொக்கு மட்டை
வாழைப்பூ சம்பா
வால் குருவை
விராலிச் சம்பா
வெள்ளைச் சிறுமணி
வெள்ளைச் சம்பா
வெற்றிச் சம்பா
வெள்ளை ஒட்டன்
வெள்ளை கபில்தலம்
வெள்ளைக் குருவை
வெள்ளை கடம்பாளை
மணக்கத்தை
வாலான்
நவரைச்சம்பா
கல்லுண்டைச் சம்பா
குண்டு சம்பா
வளைதடிச் சம்பா
கோரைச் சம்பா
குறுஞ்சம்பா
தாளான் சம்பா
மைச் சம்பா
கோடைச் சம்பா
காடைச் சம்பா
குன்றி மணிச் சம்பா
அன்ன மழகி
சொர்ணவாரி

பலவகை, இப்போது வழக்கில் இல்லாத சொல்லாகிவிட்டன.

# அரசியற் கருத்துக்கள்

**[ அன்று முதல் இன்று வரை ]**

[பேராசிரியர் இருதயராஜ்]

பலம் பொருந்திய ஜூலியஸ் சீசர், **அகஸ்டஸ்சீசர்** போன்ற சக்கிரவர்த்திகளின் கீழ் கட்டுப்பாடாக இருந்த பரந்த ரோம் சாம்ராஜ்யம் நாளடைவில் கட்டுகள் தளர்ந்து, அமைதி குலைந்து சிதையத் தொடங்கிற்று.

ரோம சாம்ராஜ்யம் சிதைந்த நேரத்தில் கிருஸ்துவ மதம் ஐரோப்பாவில் பரவிக்கொண்டிருந்தது வேகமாக. "எல்லோருக்கும் பொதுவான ஒரு கடவுள், எல்லோரும் அவருடைய பிள்ளைகள். அவருக்கு முன்னால் எல்லோரும் சமம்" என்ற அடிப்படையில் சமத்துவம், சகோதரத்துவம் என்ற கொள்கைகளை போதித்து வந்த இந்த மதம் முதலில் சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டு தாசர்களாய் நலிந்து கிடந்த இனத்துக்கு நல்லதொரு மூலிகையாகத் தெரிந்தது. காலக்கிரமத்தில் சமுதாயத்தில் கடைசிப் படியில் இருந்தவர்களுடைய ஆதரவோடு நில்லாது, அதன் சீரிய கருத்துக்கள் சீமான்களிடையேயும் பரவி, அரண்மனைக்குள்ளும் புகுந்து சக்கரவர்த்திகளையும் தன்வயப்படுத்தியது. கடைசியாக நாலாவது நூற்றுண்டில் சக்கரவர்த்தி கான்ஸ்டன்டின் காலத்தில் அதிகார பூர்வமாக சாம்ராஜ்யத்தின் ஏக மதமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது ரோமில்.

"அரசு அமைப்பதன் நோக்கமே அறத்தை நிலைநாட்டுவதற்கு — அறம் என்பது ஒரு புனிதமான இலட்சியம் — அறத்தை அடிப்படையாகக்கொண்ட எந்த அமைப்பும், புனிதமானதாகக் கருதப்பட வேண்டும். அதனால் அரசு அமைப்பும் புனிதமானது. எனவே அரசாங்க அதிகாரிகள் — நிதிபதி போன்றவர்களுடைய ஆணைக்கு எல்லோரும் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்" என்பது கிருஸ்துவ மதக்கொள்கை. மக்களைக் கட்டுப்படுத்தவும், அமைதியை நிலைநாட்டவும் கிருஸ்துவ மதம் பெரிதும் உதவியது.

"சீசருக்கு சேரவேண்டியதை சீசருக்குச் செலுத்திவிடுங்கள்" என்ற இயேசுவின் மொழிகள் அரசு இருக்கவேண்டிய தன் அவசியத்தை எடுத்துக்காட்டின. இவ்வுலக காரியங்களைக் கவனிக்க தனி ஒரு அமைப்பும், ஆத்மார்த்த காரியங்களைக் கவனிக்க தனி ஒரு அமைப்பும், இருக்கவேண்டுமென்றும் ஆத்மார்த்த காரியங்களில் அரசாங்கம் தலையிடுவது தவறென்றும் கூறப்பட்டது. அரசியற் கருத்துக்கள் வளர்ச்சியில் இந்தக் கொள்கை பெரியதொரு மாறுதலை உண்டாக்கியது.

### கிருஸ்துவுக்கு முன்

கிருஸ்துவுக்கு முன் கிரேக்க, ரோம சாம்ராஜ்யங்களில் மதத்துக்கும் அரசாங்கத்துக்குமிடையே பேதம் காட்டாமல் அரசாங்கமே, மதத்துக்கு அடிப்படையாகவும் அரசாங்க, மத காரியங்கள் ஒன்று சேர்ந்தே பிரிக்க முடியாத அளவுக்கு பின்னிக்கொண்டிருந்தன. கிரீஸிலும் ரோமிலும் எந்த ஒரு முக்கிய அரசாங்க அலுவல் ஆரம்பிக்கப்படு முன்னும் மதாசாரியர்களுடைய அங்கீகாரமும் சம்மதமும் பெறுவதே சம்பிரதாயமாயிருந்தது.

கிருஸ்துவுக்குப் பின்னுங் கூட ஏறக்குறைய பதினாறு நூற்றுண்டுகளுக்கு மதத்திற்கும் அரசுக்கும் இடையே அலுவல்களின் வரம்பு எது

> **"பரந்து கிடந்த ஐரோப்பாவில் பல நாடுகள் முளைத்தன........"**

என்று நிர்ணயிப்பதே ஒரு பெரும் பிரச்னையாக இருந்தது ஐரோப்பாவில். ஒரு சமயம் மத ஆதிக்கம் மிதமிஞ்சி அரசு அதற்கு அடிமையாக்கப்பட்டும், பிற சமயங்களில் அரசு தன் ஆதிக்கத்தை மதத்தை நசுக்க உபயோகிப்பதும் இவ்வாறு இரண்டுக்குமிடையே ஓயாப்போர் நடந்துகொண்டே இருந்தது. கிருஸ்து பிறப்புக்குப்பின் பதினாறு நூற்றுண்டு வரை.

*

அதே சமயத்தில் ஐரோப்பாவில் வேறொரு புதிய அரசியல் அமைப்பும் நடைமுறைக்கு வந்து கொண்டிருந்தது. வடக்கே இருந்து ட்யூடன் (Tueton) என்ற அநாகரீக காட்டுமிராண்டி ஜாதியினர் ரோம சாம்ராஜ்யத்தைப் படையெடுத்து வந்து அதை சின்னபின்னமாக்கினர். ஐரோப்பா முழுவதும் நூற்றுக் கணக்கான பாளையப்பட்டுக்காரர்கள் தோன்றினார்கள்.

இந்த பாளையப்பட்டு ஆட்சி (Fendlism) அங்கு ஏற்பட்டதற்கு பல காரணங்கள் இருந்தன.

அநாகரீக ஜாதியினர் அடிக்கடி படையெடுத்து வந்து தொல்லை கொடுத்த நேரத்தில், உழுது பயிரிட்டு வந்த விவசாயிகள், அமைதியை நிலைநாட்டுவதற்குப் போதிய பலம் பொருந்திய அரசாங்க அமைப்பு இல்லாததைக் கண்டு, தங்களைக் காப்பாற்றக்கூடிய ஒரு பிரபுவினிடம் அண்டி, அவர், தம்மைக் காப்பாற்றவேண்டுமெனவும், அதற்குப் பதில் அவர் சொற்படி தாங்கள் நடப்பதாகவும் ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். இம்மாதிரி நாளடைவில் ஒரு பிரபுவிடம் பலர் அண்டிப் பிழைப்பது வழக்கமாய்விட்டது. இந்தப் பிரபுக்கள் வைத்ததே சட்டம், அவர்களுக்கு அடங்கிய பாளையங்களில். அவர்களுக்குக் கீழ் இருந்தவர்களெல்லாம் பண்ணையாட்களாக மாறினர்.

மேலும், ஒவ்வொரு சமயங்களில் பலமுள்ள படைத்தலைவர்கள் சாம்ராஜ்யம் அழிவுப் பாதையை நோக்கிச் சென்றுகொண்டிருந்த அமைதியில்லாத காலங்களில், தங்கள் சொந்த பலத்தால் சில பிரதேசங்களை ஜெயித்து தமதாக்கிக்கொண்டனர். ஒருவன் கைப்பற்றிய பிரதேசத்தில் உள்ள நிலத்துக்கெல்லமே அவனே அதிபதி. அவன் தனக்குப் பிரியமான நம்பிக்கையுள்ள நண்பர்களுக்கோ உறவினர்களுக்கோ தன்னுடைய பிரதேசத்தை பாளையங்களாகப் பிரித்து, ஒவ்வொருவரையும் ஒரு பாளையப் பட்டக்காரராக நியமித்தான். இந்தப் பட்டக்காரர்கள் அனைவரும்

மன்னனுக்கு ஆபத்துக்காலங்களில் உதவுவதாக வாக்களித்தனர்.

ஆனல், நாளடைவில் இந்தப் பாளையப்பட்டு ஆட்சி அமைப்பு முறை, மன்னனுடைய பலத்தைக் குறைக்கவும் சாதகமாயிருந்தது. ஒவ்வொரு பாளையப் பட்டக்காரரும் தனக்கடியில் விவசாயம் செய்து கொண்டிருந்த அனைவரையும் தனக்கு வேண்டும்போது உதவ வேண்டும் என்று வாக்குறுதி செய்யும்படி நிர்ப்பந்தம் செய்தான். அதனல், பண்ணையாட்கள் நேரடியாக மன்னருக்குக் கட்டுப்பட்டவர்களாகத் தங்களைக் கருதிக்கொள்ளவில்லை. தங்கள் ஊழியமும் உதவி செய்வதாகக் கொடுத்த வாக்குறுதியும் தங்கள் பாளையப்பட்டக்காரருக்கே உரியது என்று நினைத்தார்கள்.

இந்த நிலைமையில், ஒரு மன்னனுக்கு எதிராக ஒரு பாளையப்பட்டக்காரரோ அல்லது பலரோ சேர்ந்து போராடினல், அந்த. எதிர்க்கும் பாளையங்களில் உள்ள பண்ணையாட்கள் அனைவரும் தங்கள் தங்களுடைய எஜமானர்களுக்கே உதவி செய்வார்களே தவிர மன்னனைப்பற்றிக் கவலையே கொள்ளமாட்டார்கள்.

இவ்வித சமூக ஏற்பாட்டின் பயனாக ஐரோப்பா முழுவதும் ஒழுங்கின்மையும் அராஜகமும் நிலவியது. மன்னர்களுடைய ஆட்சி எங்கும் நிலைத்திராமல் நிச்சயமில்லாததாகியது. எந்த நேரத்தில் மன்னரின் முடி சாயுமோ என்று சொல்லுவதற்கில்லை.

நார்மண்டி என்ற பாளையத்துக்கு அதிபதியாயிருந்தவன் வில்லியம் என்பவன். அவன் எந்த மன்னனுடைய அதிகாரத்தின்கீழ் இருந்தானே அவனுக்கெதிராகவே பல தடவை போர் புரிந்து தொல்லை கொடுத்தவன். அவன் தனக்கிருந்த சாதகமான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு இங்கிலாந்தையே கைப்பற்றினன். அதன்பின் இங்கிலாந்தை பல பாளையங்களாகப் பிரித்து, தனக்கு வேண்டியவர்களைப் பாளையப் பட்டக்காரர்களாக நியமித்து அவர்களிடமிருந்து தன்க்கு உதவிசெய்ய வேண்டுமென வாக்குறுதி பெற்றுக்கொண்டு ஆட்சி செலுத்தினன்.

ஆனல்' தான் அம்மாதிரி ஒரு காலத்தில் பாளையம்பட்டக்காரராக இருந்தபொழுது தன்னை அந்நிலைமையில் அமர்த்திய அரசனுக்கே தொல்லை கொடுக்க முடிந்ததை ஞாபகப்படுத்திக்கொண்டு அந்த அபாயத்தைத் தவிர்க்க ஒரு சூழ்ச்சி செய்தான். ஒவ்வொரு பாளையத்திலிருந்தும் பண்ணையாட்களை வரவழைத்து அவர்களெல்லோரும் மன்னனுகிய தனக்கு உதவி செய்வதாக ஒரு வாக்குறுதியும், மன்னனுக்கு எதிராக அவர்களுடைய நேரடியான எஜமானர்களாகிய பாளையப்பட்டக்காரர்களுக்கு உதவி புரிவதில்லையென்று ஒரு வாக்குறுதியும் செய்யுமாறு ஒரு ஏற்பாடு செய்துகொண்டான். இவ்விதமாக இங்கிலாந்தில் பாளையப்பட்டு ஆட்சி அமைப்புமுறை இருந்தபோதிலும், அராஜகம் தலைகாட்டாதவாறு வில்லியம் என்ற அரசன் பார்த்துக்கொண்டான்.

இதனல்.........

இத்தகைய உபாயங்களைக் கையாண்ட மன்னர்கள் ஒரு சிலரே. ஐரோப்பாவில் மற்ற இடங்களில் பாளையப்பட்டக்காரர்களின் தொல்லை தாங்கமுடியாத அளவுக்கு வளர்ந்தது. தங்கள் விருப்பம்போல் காட்டுராஜாக்களைப் போல் நடக்கத் தலைப்பட்டனர், அவர்கள்.

இந்த சூழ்நிலையில் அரசியற் கருத்துக்கள் வளருவதற்கோ அவைகளில் மாற்றங்கள் காண்பதற்கோ இடமில்லாமற் போயிற்று. ஐரோப்பா பல துண்டுகளாகத் துண்டாடப்பட்டது. ஒற்றுமையோ சுதந்தரமோ சாத்தியமானதாகத் தோன்றவில்லை. இந்த நிலைதான் கிருஸ்து பிறப்புக்குப்பின் பதினைந்து நூற்ருண்டுவரை நிலவி வந்தது.

இவ்வளவு கலவரக் காலத்திலுங் கூட ஒற்றுமை குலையாமல் இருந்தது கிருஸ்துவ மத அமைப்பு ஒன்றுதான். ரோமில் இருந்த போப் என்ற மதத் தலைவரின்கீழ் ஐரோப்பா முழுவதும் பரவியிருந்த இந்த அமைப்பு அம்மதத்தைச் சேர்ந்தவர்களையெல்லாம் — அதாவது ஐரோப்பாவில் இருந்த எல்லோரையுமே—ஒன்ருகச் சேர்த்து வைத்துக்கொண்டிருந்தது.

## புது மாறுதல்

ஆனல், பதினைந்தாவது நூற்ருண்டுக்குப் பின் ஒரு பெரிய மாறுதல் தோன்றியது. வியாபாரத் துறையில் வளர்ச்சி ஏற்பட்டது. வியாபாரிகள் செல்வந்தர்களாக மாறினர். அவர்கள் தலையெடுத்ததும், நிலச் சுவான்தாரர்களாகிய பாளையப்பட்டக்காரர்களின் ஆதரவைப் பெற்ற பாளையப்பட்டு ஆட்சியை எதிர்த்தனர்.

அதே சமயத்தில், ஐரோப்பா முழுவதும் இதுவரை ஒரே தலைவரையும் ஒரே அமைப்பையும் கொண்டிருந்த கிருஸ்துவ மதத்திலும், ஒற்றுமை குலையும் விதத்தில் மல பிரிவுகள் தோன்றின.

இயற்கையாகவே அமைப்பட்ட சில எல்லைகளுக்குள்ளே வாழ்ந்தவர்களின் பிரதேசப் பற்று, இனப் பற்று இவைகள் வளர்ந்து, அதன் காரணமாக சிறிய சிறிய பாளையப் பட்டுக்கள் ஒன்று சேர்ந்து இணைக்கப்பட்டு தனித்தனி நாடுகள் தோன்றின. பிரான்சு, ஸ்பெயின், ஸ்விட்ஜர்லாந்து, நெதர்லாந்து, ரஷ்யா, ஜர்மனி, இத்தாலி என்ற பெயர்களைக் கொண்ட தனித் தனி ராஜ்யங்களாகப்பிரிக்கப்பட்டது, ஒருகாலத்தில் ஒரே நாடாக, ஓரே பகுதியாக கருதப்பட்ட ஐரோப்பா.

இப்படித் தனியான அரசுகள் ஏற்படவே ரோமர்களால் பெரிதும் போற்றப்பட்டு வளர்க்கப்பட்ட பொதுமை யுணர்ச்சி பறந்துவிட்டது. பொதுத் தலைமை வேண்டுமென்ற எண்ணம் மாறியது. பாளையக்காரரின் அக்கிரம ஆட்சி மறைந்தது.

## தேசிய உணர்ச்சி

சர்வதேச சட்டம் என்ற பெயரில் எல்லா அரசுகளையும் சமமாகக் கருதி அரசுகளுக்குள் சமத்துவத்தை ஏற்படுத்தும் ஒரு அமைப்புத் தேவை என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஒரு பிரதேசத்தில் வாழும் மக்களுக்குள்ளே உண்டான ஒற்றுமையால், தனித்து, தங்கள் தங்கள் இனத்துக்கு ஒரு தனி ராஜ்ய அமைப்புத் தேவை என்ற அடிப்படையில் சிறிய நாடுகளும், பெரிய நாடுகளுமாக பல ஏற்பட்டன. இதைத்தான் தேசிய உணர்ச்சி என்று சொல்லுவது. ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள், ஒரே கலாச்சாரத்தைக் கொண்டவர்கள், ஒரே மொழியைப் பேசியவர்கள் தங்களுக்குச் சொந்தமான, இயற்கையாகவே எல்லைகள் ஏற்பட்டிருந்த, இடத்தைத் தங்கள் நாடாக, தேசமாக, ராஜ்யமாகக் கருதி அமைத்துக்கொண்டதன் விளைவுதான் இன்று ஐரோப்பாவில் பல நாடுகள் இருப்பது.

(தொடரும்)

# 'வெண்ணெய்' வைத்து!

"வெண்ணெய்," ஒரு பிரச்னையாகி விட்டது, அமெரிக்காவில்.

"சமுத்திரம் போல," தேங்கியிருப்பதாக 'இந்து' நிருபர் பலராமன் எழுதுகிறார்.

அந்தச்சமுத்திரத்தை,என்னசெய்வதென்று தெரியவில்லையாம்! பிற நாடுகளுக்கு அனுப்பலாமென்றால், வெண்ணெயை மட்டுமே வியாபாரப் பொருளாகக்கொண்டு வாழும் டென்மார்க், நியுஜிலாந்து முதலியவைகள் சண்டைக்கு வருமே என்ற அச்சம் வேறு வாட்டுகிறதாம்.

ஆகவே.....! என்று, அனுதினமும், ஒவ்வொரு மாதிரியான யோசனையில் ஆழ்ந்தவண்ணம் கிடக்கின்றனராம், அமெரிக்கப் பிரபுக்கள்.

சமுத்திரம்போல வெண்ணெய்! சஞ்சலமோ, குடைகிறது, மனதில்.

எனினும், அவர்களுக்கு, இறுமாப்பும் கெடுமதியும் போகவில்லை — என் கண்கள் போனாலும் பரவாயில்லை, எதிரியின் ஒரு கண் போனால்போதும் என்கிறது, அமெரிக்கா! விற்காத வெண்ணெய் — வாஷிங்டனில்; அதுவும் 'சமுத்திரம்' போல.

அவ்வளவு வெண்ணெய் கிடப்பதைக் கண்ட, ரஷ்யா, கேட்டதாம், "அமெரிக்க சர்க்காரே! அழியும் வெண்ணெயை, நாங்கள் வாங்கிக்கொள்ளுகிறோம்; இனமாக அல்ல! விலை கொடுத்து வாங்கிக்கொள்ளுகிறோம். விற்கிறீர்களா, எங்களுக்கு," என்று.

விண்ணப்பம் போட்டுக் கேட்டதாம், அமெரிக்காவை!

"முடியாது!", என்று மறுத்துவிட்டனராம், அமெரிக்கப் பிரபுக்கள்.

மறுப்புக்குச் சொன்ன காரணம், "ரஷ்யா சொல்லும் விலை, மிகக் குறைவாக இருக்கிறது," என்பது.

உண்மைக் காரணம் என்ன தெரியுமா? என்று, எழுதுகிறார், பலராமன்.

குறைவான விலையல்லவாம், காரணம்!

"ரஷ்யாவுக்கு வெண்ணெய் தேவை. அதனாலேயே நம்மைக் கேட்கின்றனர். நாம் முடியாது என்று சொல்லிவிட்டால், ரஷ்யாவில் வெண்ணெய்க் கஷ்டம் ஏற்படும். பிறகு......ரஷ்ய மக்கள், வெண்ணெயில்லாமல் கஷ்டப்பட நேரும். அட்டா! கம்யூனிஸ்டு சர்க்கார் இருப்பதாலல்லவோ, நமக்கு வெண்ணெய்க் கஷ்டம் வந்துவிட்டது. செச்சே! கம்யூனிஸ்டு அரசாங்கம், வெகு மோசம். பார், பார், அமெரிக்காவை!"—என்று மனம்மாறி, தமது அரசுமீது, ரஷ்ய மக்களுக்கு அதிருப்தி உண்டாகிவிடும். அதன் பிறகு......! என்று, 'கனவு' காண்கின்றனராம், அமெரிக்க அரசினர்.

வெண்ணெயை வைத்துக் கொக்கு பிடிப்பது!—என்பர், வீணனின் விரும்பாத செயலைப் பார்க்கும் நம்மவர்.

அதோ, அமெரிக்கா, வெண்ணெயை வைத்து ஒரு சர்க்காரையே மாற்றி விடலாமெனக் கனவு காணுகின்றனர்.

விந்தையாகத் தோன்றலாம், தோழர்களில் பலருக்கு! அமெரிக்கரின் சிந்தை அப்படி இருக்கிறது !!

வெண்ணெய் வீணானாலும் பரவாயில்லை-ரஷ்யாவுக்கு மட்டும் போகக் கூடாது-அங்குள்ள மக்கள் கஷ்டப்பட்டு, அதனால் மனம் மாறி, கம்யூனிஸ்டு 'சர்க்காரைக் கவிழ்த்து... என்றெல்லாம் எண்ணுகின்றனராம்.

சீப்பை எடுத்து மறைத்துவிட்டு கல்யாணம் எப்படி நடைபெறும்!- என்று சொன்ன காரிகையின், கதை தெரியும் நமக்கு.

அந்தக் காரிகையின் உருவில், இதோ, அமெரிக்கா என்கிறார், பலராமன்!

இந்த வெண்ணெயில்லாததால், ரஷ்யமக்கள் மனம் உருகி, மாறி விடுவர் என்று கருதுகின்றவர்கள், எவரும் இரார்-இந்த உலகில். எனினும், அப்படியோர், ஆசை, அமெரிக்கருக்கு! கையாலாகாதவன், பகற்கனா காண்பதுண்டல்லவா, மரம் வளையும்! கனி, என்வாயருகேவரும்! கடிப்பேன் குதப்புவேன்! என்று. அதுபோல ஒரு ஆசை!!

அந்த, ஆசையில் தொக்கிக் கிடக்கும், அமெரிக்காவின் மனவளத்தை அறிய வேண்டுகிறோம் அன்பர்கள்.

ஊர் முழுதும் சுடுகாடாகவேண்டுமென்றானும் ஒருவன்! ஏண்டா உனக்கிந்த கெடுமதி? என்று இன்னொருவன் கேட்க அப்போது தாண்டா என் விருப்பம்போல், எந்த இடத்திலும் மாளிகை எழுப்பமுடியும்- அந்த மாளிகையைச்சுற்றி, ஒரு மாந்தோப்பு, பூஞ்சோலை குளம் எல்லாம் அமைத்து ஆனந்தமாக வாழலாம், இது என் ஆசை என்றானாம். அதையும் மிஞ்சுகிறது, அமெரிக்கா. ரஷ்ய உயிர்கள் வாடினால், அதன் மூலம் தனக்கு வெற்றிகிட்டும் என்று வீண் கனா, காண்கிறது!!

எத்தகைய மனம், இது! எவ்வளவு கோரமான உள்ளம் அவர்களுடையது!!

*

வெண்ணெய் விஷயம் — அப்படி இருக்கிறதா.

அரிசிப் பிரச்னையில் அதியற்புத முடிவொன்று செய்யப்பட்டிருக்கிறது, அங்கே.

கடந்த 17 ஆண்டுகளில் இப்படியொரு முடிவு எடுக்கப்படவில்லையாம். அரிசி உற்பத்தியாளர்கள் எல்லாம் ஒன்று கூடி எடுத்த அந்த அதியற்புத முடிவு என்ன தெரியுமா—"இனிமேல், அதிகமான அளவில் அரிசி உற்பத்தி செய்வதில்லை"

உலகின் பல பகுதிகளில் அரிசிக்கு அல்லாடும் மக்கள், ஏராளம், ஏராளம்.

ஆனால், அமெரிக்கா முடிவு செய்கிறது—அதிக அரிசி உற்பத்தி கூடாதென்று.

இப்படி அதிகம் ஆவதால், விலைகள் குறைந்து, கிராக்கி இல்லாமற் போகுமே; என்ன செய்வோம்-என்று அஞ்சி' இந்த முடிவு எடுத்திருக்கின்றனர்.

கிராக்கி இல்லையென்றால், இலாபம் வரமுடியாதல்லவா? அதனால், அரிசி உற்பத்தி குறைக்கப்படுமா. இதனைக் கேள்விப்படும்போது, அமெரிக்க பிரஜைகளில் ஒவவொருவரும் அபரிமிதமான அரிசியை வீடுகளில் கொட்டி வைத்திருப்பதாக எண்ணாதீர்கள். அங்கேயும் குமுறும் குப்பன்; வாடும் வரதன்; திருடும் தேசப்பன்—உண்டு.

தேங்கிக் கிடப்பது, பிரபுக்களிடம். அதனால், இலாபம் குறையுமே என்பதால், ஒன்றுகூடி, உற்பத்தியை மட்டுப்படுத்துவதென்று முடிவு செய்துள்ளனர்.

இதற்கு, அமெரிக்க அரசாங்கம் என்ன செய்தது தெரியுமோ? பேசாமலிருக்கிறது!

உலகில், ஒவ்வோரு நாடும், எவ்வளவு அதிகமாக உற்பத்தி செய்கிறோமோ, அவ்வளவு நல்லது என்கின்றன.

**கலைமகன்**

[மாத இதழ்]

பிப்ரவரி 15-ல் வெளிவரும்

[முதல் இதழின் வருமானம், இலவச இரவு பள்ளிக்குப் பயன்படுத்தப்படும்.]

கலை வளர்ச்சிக் கழகம்
310, திருவொற்றியூர்

அதிகம் உற்பத்தியானுல், மக்களின் மனேயெல்லாம் மகிழ்ச்சி ததும்பும் என்பதால், கஷ்டப்படும் இந்தியா போன்ற நாடுகள் நாள்தோறும் ,உற்பத்தி, உற்பத்தி' என முழக்கமிடுகின்றன.

இந்தியா போன்றவைமட்டுமின்றி, சுகச் சோலேயான ரஷ்யா கூட, அதிகமாக உற்பத்தி செய்யும் விவசாயப் பண்ணேகளுக்கு பரிசுகள் வழங்கி ஊக்கமளித்துக்கொண்டிருக்கிறது.

ஆனுல், அமெரிக்காவில், அதிக உற்பத்தி அச்சம் உண்டாக்குகிறது!

அந்த அச்சம் ரஷ்யாவில் மட்டும் ஏற்படவில்லே.

ஏன்? என்ன காரணம்? ரஷ்யாவில் அச்சம் ஏற்படாததற்குக் காரணம், அங்கு மக்கள் 'ரேஷன்' வாங்கிச் சாப்பிடும் நிலேமையால் அல்ல; வயிருரச் சோறு உண்டு. ஆயினும், உற்பத்தி அதிகமாவது, அவர்களுக்கோர் பிரச்னே இல்லே.

அமெரிக்காவுக்கோ அது பிரச்னேயாகிறது. அதுவும் எப்படிப்பட்ட அமெரிக்காவில்? வயிருர ஒரு சிலர் உண்ணவும்; மிகப்பலர், வாடவும், திருடவும், தீய வழிகளில் செல்லவுமாக இருக்கும் அமெரிக்காவில்.

இதற்கு, என்ன காரணம்? ரஷ்யா, பொருள் உற்பத்தியைப்பற்றி பிரச்னேயாகக் கருதவில்லே; அமெரிக்கா, கருதுகிறது, என்ன காரணம்?

*

காரணம், என்ன!—எனும் கேள்வியை, இன்றல்ல, நீண்டகாலத்துக்கு முன்பே பலர் கேட்டனர். அந்தக் கேள்வி எழுந்ததன் விளேவாகத்தான், உலகுக்கு ஒரு அரிய அரசியல் தத்துவம், கிடைத்தது! பூமி, அனேவருக்கும் பொதுச்சொத்து. அதற்கு, வரம்பு கட்டி, இதுவரையில் எனக்கு, அதுவரையில் உனக்கு என்று உரிமை கொண்டாடுதல் அநீதி. அந்தப் பூமி முழுமையையும் காப்பதே, அரசின் கடமை! அந்த அரசு, மக்களின் அரசாக இருக்கவேண்டும். மக்களின் எண்ணங்கள், அந்தப் பூமியை அரசோச்சவேண்டுமேயொழிய தனியொருவனின் எண்ணங்கள் சட்டமாதல் தடுக்கப்படவேண்டும்.

ஒற்றுமையாக உழைத்திடுவோம் நாட்டில்
உற்ற துணேவராய் வாழ்ந்திடுவோம்;
வெற்றுரை பேசித் திரியவேண்டா—இன்னும்
வினுப் புராணம் விரிக்கவேண்டா!

[கவிமணி]

"மணிமுடியா! சிம்மாதனமா! செங்கோலா! ஒழிக, ஒழிக! மக்கள் அரசு தேவை! சமத்துவம்—சகோதரத்துவம்—சுதந்திரம், எனக் கூவு! — என்று வளர்ந்து, கடைசியில், சமூகத்தில் நீதி கிடைக்கவேண்டுமென்ருல், பூமி அனேவருக்கும் சொந்தம், அந்தப் பூமி வழங்கும் பொருள்கள் எல்லோருக்கும் சொந்தம் எனக் கூறும் "சமதர்ம" முறை, கிடைத்தது. இந்த 'சோஷியலிசம்,' தான் சமூகத்தின் சிக்கலேப்போக்கி, நன்மை மலர்விக்கும் என்று பேசப்பட்டது! உயரப்பரையும் ஓடப்பரையும் ஒப்பப்பர் ஆக்கும் உன்னதமான வழி என்று எல்லோராலும், ஏற்கப்பட்டிருக்கிறது.

எந்தெந்த நாடுகள், ஏழ்மையையும் இல்லாமையையுமே தனது சொத்தாக வைத்துக்கொண்டிருக்கிறதோ அவைகளின் நல் வாழ்வுக்கு, இதுவே நல் மருந்தாகும்!

இந்த முறையின் அடிப்படையில், நடைபோடுவதால்தான் ரஷ்யாவுக்கு, உற்பத்தி எவ்வளவு ஆனதென்ருலும் அது பெரிதாகப்படவில்லே. அங்கே, ரூபா! அணு, பைசாக்கள் அல்ல, நாட்டின்வளம். உற்பத்திசெய்யப்படும் பொருள்கள்! அமெரிக்காவிலே நாட்டின்வளம், தம்வசம்இருக்கும் தங்க நாணயங்களே! அதனுல் இங்கு, உற்பத்திப் பொருள்களேவிட அதன் மூலம் கிடைக்கும் லாப நஷ்டமே பெரிதாகத் தென்படுகிறது!

ரஷ்யாவிலே, எப்படி உற்பத்தி செய்யவேண்டுமென்பதும் அதைவிட உற்பத்தியானதை எப்படி விநியோகிக்க வேண்டும் என்பதும் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்காவிலே, எப்படி உற்பத்தியைப் பெருக்கலாம் என்பதற்கான முயற்சிகள் உள்ளனவே அன்றி அதன் மூலம் உற்பத்திசெய்யப்படும் பொருள்கள் அனேத்தும் சராசரி குடிமகனிடம் போகும்படியான வழிகள் இல்லே. ரஷ்யாவில் தேவை முக்கியமாகக் கருதப்படுகிறது. இங்கே தேவை அல்ல, அதை அடைய ஒருவனுக்குள்ள வசதி என்ன என்று கணக்கிடப்படுகிறது. இந்த முரண்பாடுகள் இருப்பதால் தான், ரஷ்யாவில் உற்பத்தி எவ்வளவு பெருகினுலும் ஆனந்தமும், அமெரிக்காவில் உற்பத்தி அதிகமாகி விடக்கூடாதே என்கிற அச்சமும் இருந்துவருகிறது.

*

டாடா செய்யும் பேனு விலே ரூ. 4. கிடைப்பது அரிதாயிருக்கிறது! கடையில் எப்போது போய்க்கேட்டாலும், இல்லே, என்று சொல்லுகிருர்கள். இதனுல் எப்போதும், கிராக்கிஇருந்து கொண்டே இருக்கிறது! சரக்குக்கு போட்டி. குறைந்த மூலதனத்தில் லாபமும் அதிகம்.

## அலிகார்

*பிரசித்திபெற்ற அலிகார் பூட்டுகள் ஆண்டு ஒன்றுக்கு சீனு, பர்மா, இலங்கை, ஆஸ்திரேலியா, ஆபிரிகா முதலிய இடங்களுக்கு 72 இலட்சம் ஏற்றுமதி செய்யப்படுகிறதாம். பூட்டு செய்யப்படும் ஆலேயில் 32,000 தொழிலாளர்கள் வேலேசெய்கின்றனராம்.*

அதே கம்பெனியில் உற்பத்தி அதிகமாகி பேனுக்கள், மார்க்கெட்டில் குவிந்துவிட்டனவென்ருல், 'கிராக்கி' குறைகிறது—கடைகளில் பேனு குவிய ஆரம்பிக்கிறது. விளேவு, கம்பெனிக்கு நஷ்டமாகிறது.

*

இதுதான், பொருளாதாரத் துறையில், முதலாளித்துவத்துக்கும் சோஷியலிசத்துக்கும் இடையே இருக்கிற முக்கிய வேற்றுமையாகும்.

இதனுல்தான், அதிக உற்பத்தியாயிற்று என்றதும், அலறுகிறது அமெரிக்கா!

ஆனந்தத்தோடு, தன் வேலேயைப் பார்க்கிறது, ரஷ்யா.

ஏனென்னில், அமெரிக்காவில், லாபமும் நஷ்டமும் பிரபுக்களேச் சேர்ந்தது—தனிப்பட்டவர்களின் விஷயம்.

ரஷ்யாவில், லாபமும் நஷ்டமும், அரசின் விஷயம்—அதாவது, பொதுப் பிரச்னே.

தன்னுடைய லாபம் பாதிக்கப்படும் என்பதைசிந்திக்குமளென்றி, அதைக் காப்பாற்றிக்கொள்ள வழிவகைகள் என்ன என்கிற ஆலோசனேயில் ஈடுபடுகிருன். நஷ்டம் ஏற்படுமென்ருல், அவனுக்கு நாட்டைப்பற்றி எவவித அக்கரையும் கிடையாது! ஆலேயை மூடுவான்—அல்லது உற்பத்தியைக் குறைப்பான்.

பொதுப் பிரச்னே எனக் கருதும் சமதர்ம சமூகத்தில், இலாபமும் நஷ்டமும் மக்களின் பொதுவிஷயம் என்பதால், இலாபத்தை அடிப்படையாக வைக்காது, மக்களின் நன்மையையே அடிப்படையாக வைத்து, உற்பத்தி கணக்கிடப்படும்.

இதுதான், ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்குமிருக்கும் மூல வேற்றுமையாகும்.

இந்த வேற்றுமையை அறியும் அமெரிக்கா. ஆயினும், அந்த வேற்றுமையை அகற்றும் மார்க்கத்தில் ஈடுபடும் ஆசை' அங்கே இல்லே. காரணம், அது பிரபுக்கள் பூமி. அதனுலேயே, 'வெண்ணெய்' மூலமாகவாவது, கம்யூனிஸ்டுக் கொக்கைப்

பிடித்துவிடலாமா என்று கனவு காணுகின்றனர்.

*

அமெரிக்காவோ, "கம்யூனிசம் எனக்கு எதிரி! சோஷியலிசம் எனக்குப் பிடிக்காது!!" என்று உலகுக்கு அறிவித்துவிட்டு, அவைகளை அழிக்கவும் சபதம் கொண்டிருக்கிறது.

அதனால்தான், 'வெண்ணெய்' விஷயத்தில்கூட, வேற்றுமை காட்டுகிறது.

ஆனால், இந்தியாவின் நிலை என்ன? இது போகபோக்கியத்தில் அமெரிக்காவுமல்ல! பொருளாதாரப் பேதம் போக்கிய ரஷ்யாவுமல்ல! அன்னியன் பிடியிலிருந்து விலகி, தன்னுடைய வாழ்வு நிலைக்குமா என்கிற போராட்டத்தில் கிடக்கும், பூமி.

இங்கு, வாழும் மக்களுக்கு வேண்டிய அளவில், பொருள் உற்பத்தியில்லை; ஆலைகள் இல்லை; வேலைசெய்ய வழிவகை இல்லை! இவை இல்லையே ஒழிய, நாடு ஒன்றும், பாலைவனமாக இல்லை. நஞ்செயும் புஞ்செயும் உண்டு! ஆனால், அவைகளில் பொருள்களைக் குவிக்கும் வழிவகைகள் இல்லை.

இப்படிப்பட்ட நாடுதான் சீனா! அங்கு, பல மாறுதல்கள் — ஏற்பட்டுவிட்டன!

ஆனால், இங்கே! அண்மையில் சீனாவுக்குப் போய்ப் பார்த்ததன் விளைவாக, "சோஷியலிச மாதிரியில்......" சமூகத்தை அமைக்கப்போவதாகச் சொல்லப்படுகிறது.

அதாவது, ஒருபுறம் அமெரிக்கவாடையும் இருக்கும்! இன்னொருபுறம் ரஷ்ய வாடையும் தென்படும்!

இதைப்பற்றிப் பேசிய பண்டிதர் "முதலாளிகளும் இருந்தால்தான், சர்க்கார் சார்பில் நடைபெறும் தொழில்களுக்கு, அவர்களைவிட நாம் நன்றாக செய்யவேண்டுமே எனும் போட்டியுணர்ச்சி ஏற்படும். ஆகவே தரன், இரு முறைகளும் இருக்க வேண்டுமெனக் கூறுகிறேன்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இரண்டும் இருக்கவேண்டுமாம்! அப்போதுதான்' ஒன்றையொன்று போட்டி போட்டுக்கொண்டு உற்பத்தி நிறையக் கிடைக்குமாம்!

உற்பத்தியானதைக் குறைப்பதெனத் தீர்மானம் போடுகின்ற பிரபுக்கள்—அதோ அமெரிக்காவில்! அது போன்று இங்கேயிருக்கும் பிரபுக்கள் மனதில் அதிக உற்பத்தி செய்ய வேண்டுமேனும் போட்டியைப் புகுத்தப் போகிறாராம்.

'வெண்ணெய்' வைத்து கொக்கு பிடிப்பவன் கதை ஞாபகம் வருகிறதா!

★

## அதிசயம்

திருவாங்கூரில் கவிழ இருந்த பட்டம் தாணுவின் ஆட்சி, கம்யூனிஸ்டுகள் தந்த ஆதரவின் காரணமாக உயிர்வாழ்வதாகச் செய்திகள் கூறுகின்றன. காங்கிரஸ், பட்டம் தாணுவுக்கு ஆதரவு அளிக்க மறுத்துவிட்டது. பட்டம் தாணுவின் ஆட்சியில் தான், நாஞ்சிலில் பலர் பிணமாயினர் - அக்கிரமங்கள், கூத்தாடின. சிறையிலும், கோர்ட்டிலுமாக, எம். எல் ஏக்கள் உள்பட, பலர் இன்னும் இருக்கின்றனர்.

# அவைகளுக்கும் உணர்ச்சி உண்டு!

"ஏய்! என்னடா, மரம்போல நிற்கிறாயே!" என்று கூறுகிறோமல்லவா, சில நேரங்களில், நம்மில் சிலரை. உண்மையில், மரங்களுக்கும் செடிகளுக்குங்கூட, அதியற்புத உணர்ச்சிகள் உண்டாம்! அந்த விபரங்களை **எஸ். சிவசுப்ரமணியம்** தருகிறார்:—

தாவரங்களெல்லாம் உயிருள்ளவைகள். அவைகளும் மிருகவர்க்கங்களைப்போலவே பிறந்து வளர்ந்து கடைசியாக இறக்கின்றன என்பதை எல்லோரும் அறிவோம். இன்னும் எவ்வளவோ இயல்புகளில், தாவரங்கள் மிருகங்களை ஒத்திருக்கின்றன. செடிகள் இரவில் மிருகங்களைப்போலவும் நம்மைப்போலவும், பிராணவாயுவை யுட்கொண்டு கரியமில வாயுவை வெளியிட்டுச் சுவாசிக்கின்றன. தாவரங்களுக்கும் ஜீரணநீர் உண்டு. விலங்குகளைப்போல அவைகளும் தங்களுடைய அவயவங்களை அங்குமிங்கும் அசைக்கக் கூடியன. இலைகள் விரிவதும் பூக்கள் மலர்வதும் இதற்குக் காரணங்களாகும்.

இதுமட்டுமன்று. தாவரங்கள் உணர்ச்சியும் உடையவை. ஒளி உணர்ச்சி, சூடுணர்ச்சி, தொடுதல் உணர்ச்சி போன்ற உணர்ச்சிகள் இவைகளுக்கும் உண்டு. சில உணர்ச்சி மிகுந்த செடிகளின் நடத்தை விந்தையானது, இவைகளில் 'தொட்டால் சுருங்கி! என்று சொல்லப்படும் சிறு செடியொன்று. இச் செடியைத் தொட்டால், உடனே அதன் இலை இதழ்கள் முழுவதும் அப்படியே சுருங்கிக் கீழ்நோக்கி வளைந்து தொங்கும். இம்மாதிரி இச்செடி தொடுதலாகிய இக்கிளர்ச்சிக்கு எதிர்துலங்குதல் வேடிக்கையானது ஏனெனில் இச்சம்பவம்—அதாவது செடி தொடப்பட்டு அதனால் ஏற்பட்ட கிளர்ச்சியை உணர்ந்து, அதற்கிடாக மடங்கித் தொங்குதல் ஆகிய இவ்வளவும் ஒரு நொடியில் நடந்துவிடுகிறது.

தூங்குமூஞ்சி மரத்தின் இலைகள் சாயங்காலமானவுடன் தூங்குவது போல் சுருங்கித் தொங்குகின்றன அல்லவா! ஆனால் இது மிருகங்களின் தூக்கத்தையொத்ததன்று. சூரியன் மறைந்ததும் உஷ்ணநிலையும் வெளிச்சமும் குறைவதால் உண்டாகும் கிளர்ச்சியே இம்மரத்தின் அவயவங்களில் இந்த மாறுதலை உண்டாக்குகிறது,

தந்திச்செடி என்று ஒரு சிறு செடியிருக்கிறது. இதன் இலை ஒவ்வொன்றும் மூன்று சிற்றிலைகளுடைய மூவிலைத் தொகுதி. இதன் பக்கவாட்டத்திலுள்ள இரண்டு சிற்றிலைகளும் பகல் முழுவதும் அதாவது சூரிய வெளிச்சம் இருக்கும்போதெல்லாம், மேலும் கீழுமாக அசைந்துகொண்டே இருக்கின்றன. சில சமயங்களில் இருட்டின பிறகுங்கூட இவ்வசைவு காணப்படுவதுண்டு,

அல்லிப்பூவைப் பார்ப்போம். இது இரவில் விரிந்து மலர்ந்து காணப்படுகின்றது. ஆனால் பகலில் மூடிக்கொள்கிறது. இந்த மாறுதல்களெல்லாம் பகலில் வெப்பமாயும் இரவில் குளிர்ச்சியாயும் இருப்பதால்தான் ஏற்படுகின்றன. ஏனெனில், பகல் நேரத்தில் இச்செடியைக் குளிர்ச்சியான இடத்தில் வைத்தால் பூ மலர்ந்து காணப்

(10-பக்கம் பார்க்க)

திராவிடநாடு

காஞ்சி] 6—2—55 [ஞாயிறு

# "சமாதி" புலம்பும்!

★

வாயிருந்தால், அலறி ஏசும், அந்தச் சமாதி!

'மலர்மாலை—பூச்செண்டு — சலவைக்கல் மேடை — எல்லாம் சரி; ஆனால்...!' என்று ஏசும்! பேசும்!

ஏழாண்டு போய்விட்டது. எந்தை அவர். பிதாவே, தனயர்களை ஆசிர்வதியும் என்று என் பெயர் சொல்லி எங்கும் கர்ஜிக்கிறார்களே! என்று கண்ணீர் வடிக்கும்.

வேட்டுச் சப்தம்; விளக்கு அலங்காரம்; வானொலி கீதம்; பூரதம்—பொல்லாதவர்களே, இதைத்தானா உங்களிடம் எதிர்பார்த்தேன். ஏனிப்படிச் செய்கிறீர்கள்—உன்று இரத்தக் கண்ணீர் வடிக்கும்.

வர்ணத்தாலே சலவைக் கல்லா கேட்டார், என் சீடர். அன்பரே, பாகிஸ்தான் அதிபரே, நீர் அனுப்ப வேண்டாம் வர்ணக் கற்களை— என்னை 'மூடியிருப்பது போதும்—இன்னும் ஆழத்தில் மூடவா? வேண்டாம், வேண்டாம்! என்று கையெடுத்துக் கும்பிட்டிருக்கும்.

அந்நிய நாட்டு அரசியல்வாதிகளே, நீங்கள் இந்திய மண்ணில் எடுத்தடி வைத்ததும் என் சமாதிக்கு அழைத்துவந்து, பூச்செண்டுகளைத் தந்து என் சமாதிமீது வைக்கச் சொல்லுகிறார்களே, அதைக் கண்டு மயங்கிவிடாதீர்கள். என் சமாதி அவர்களுக்கொரு 'லேபிள்'—அவ்வளவுதான் என்று அழுத வண்ணம் கூறாமலிருக்காது.

அது, எங்கே பேசுகிறது? சமாதி பேசாதல்லவா! அந்தத் துணிவினால்தான், கடந்த 30ந் தேதியன்று காங்கிரஸ் தலைவர்கள், ஆங்காங்கும் அவருடைய நினைவு நாளைக் கொண்டாடியிருக்கின்றனர்.

எந்த ஆண்டையும்விட இந்த ஆண்டு, உத்தமர் காந்தியாரின் நினைவுநாளும், குடியரசு தினமும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டிருக்கின்றன. பொதுத் தேர்தல் நெருங்க நெருங்க, இன்னும் அதிகமான வேட்டு முழக்கம், வாண வேடிக்கைகளைச் செய்வர். பழைய சங்கு தானே, நமது காங்கிரஸ் தலைவர்களுக்கு இருக்கும் சொத்து. ஆகவே, அதிவிமரிசையாகவே செய்யலாம்,

காசு தருவோர் உண்டு! சர்க்கார் பொக்கிஷம், கைவசம்!! விளம்பர வசதிகள்! இத்தனையும் இருப்பதால், ஏகச் சிறப்புடனே செய்ய முடியும்.

செய்யட்டும்! ஆனால், அப்படிச் செய்வதன் மூலம், இவர்கள் நடாத்தும் அக்கிரமத்துக்கு, மக்கள் தலைசாய்த்துவிடவா செய்வர்? காந்தியடிகளின், 'ஹரிஜன' ஏடு ஆவடி விழாவுக்குமுன், அகம் நொந்து தீட்டிற்று,' ஐயோ இவ்வளவு மாறிவிட்டார்களே காங்கிரஸ்காரர்கள்' என்று.

எங்கள் சுய ரூபத்தை இன்னும் கண்டுகொள்ளவில்லை, அரிஜன்—இதோ!", என விளக்குவதுபோல, ஆவடியில், ஒரு முக்கியமான விஷயத்தில் அனைத்திந்தியத் தலைவர்களும் நடந்துகொண்டிருக்கின்றனர்.

அன்பர் நேரு, அந்தத் தீர்மானத்தைக் கண்டதும், கனல் பொறி கிளம்ப கர்ஜித்தாராம்!

என் ஆட்சி என்னுவது? என்றாராம். குடியரசுக்குழந்தையைக் கொன்றுவிடுவார்களே? - என்று கர்ஜித்தாராம்.

இப்படிப்பட்ட தீர்மானங்களைக் கொண்டுவருவது சிறுபிள்ளைத்தனம், என்றாராம்.

சீறினாராம், சினந்தாராம்! செச்சே! என்றாராம்.

அவ்வளவு எரிச்சலுக்குக்காரணமான, தீர்மானம் இது! "நாட்டில் ஏற்படும் துப்பாக்கிப் பிரயோகங்களால் நமது சுயராஜ்யத்தின் கீர்த்திக்கே பங்கம் விளைகின்றன. ஆகையால் எங்காவது போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தால் அதுபற்றி விசாரிக்க ஒரு நிரந்தரக் குழு இருக்கவேண்டும். இந்தக் குழு துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்றால் உடனுக்குடன் விசாரித்து மக்களுக்கு விபரங்களைத் தெரிவிக்கவேண்டும். அதிகாரிகள் வேண்டுமென்றே செய்தார்களா இல்லையா என்பதை அப்போதுதான் நாம் கண்டுபிடிக்க முடியும்." இதுதான், தீர்மானம்! கொண்டுவந்தவர், ஜம்னுதாஸ் பட்டேல் எனும் குஜராத் வாசி.

இந்தத் தீர்மானத்துக்குத்தான்—நேருவின் கண்களில், கனல்! ஏனைய மந்திரிகளின் மனதில் எரிச்சல்!

'துப்பாக்கிப் பிரயோகம் பற்றி விசாரிக்க ஒரு நிரந்தரக் குழு'—இது, தீர்மானம்.

இது, கூடாது! கடுமையாக எதிர்க்கிறேன்!—என்று, பண்டிதரின் கர்ஜனை. இதனால், சர்க்காரே இயங்கமுடியாத நிலைமைக்கு, ஆளாகவேண்டுமே. ஐய்யோ!—என்று அங்கலாய்த்திருக்கிறார், பண்டிதர்.

வேட்டுச் சப்தம் வேண்டாம். நாட்டுமக்கள் என்ன நாய்களா, பறவைகளா?-என்கிறார் பட்டேல்.

அது எப்படி சாத்யம்! துப்பாக்கியின் குண்டுகள் இல்லையென்றால் துரைத்தனம் சரியாக நடக்குமோ! என்கிறார், பண்டிதர்.

சுயராஜ்யத்துக்குப் பின்பு நாட்டில் வெடித்த துப்பாக்கிச் சப்தங்களையும், குண்டடிபட்டு வெந்து போன குடும்பங்களின் கணக்கையும், எண்ணினால் மனம் பதறும்! துப்பாக்கியிருக்கிறது எனும் துணிவில், சேலம் சிறைக்குள் 22 பிணங்களை எண்ணிக்கொள் என்று, சுட்டுத் தள்ளினர். இவ்வளவு அக்கிரமங்களும் தேவையாம்-அப்போதுதான் அராஜக சக்திகளுக்குப் பயம் ஏற்படுமாம். அன்பர் நேரு தெரிவிக்கிறார்.

இரத்தமும் பிணமும் இவரது ஆட்சி, ஆபத்து இல்லாமலிருப்பதற்குக் கொட்டப்படவேண்டுமாம்.

நேரு, மிகப் பெரியவர்! — மறுப்பதற்கில்லை. ஆனால், ஆட்சியின் ஆசையில், அந்த நெஞ்சமும் நெருப்பாகியிருக்கிற அலங்கோலத்தை என்னவென்று சொல்வது? துப்பாக்கிப் பிரயோகம் வேண்டுமாம்! சொல்லுகின்றார், காந்தியடிகளின், சீடர்.

'ஆம்! ஆம்! அவசியம் துப்பாக்கிப் பிரயோகம் வேண்டும். அது இல்லையென்றால், ஆபத்து! ஆபத்து!' என்று, நேருவின் சகாக்களும், தலையசைத்தனரே யொழிய, எவ

## பொதுக் குழுக் கூட்டம்

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுக் கூட்டம் பிப்ரவரி 19 20-ந் தேதி (சனி, ஞாயிறு)களில், கோவை மாவட்டம் பேரூரில் நடைபெறும்.

ஆராயப்படும் பொருள், கூட்டம் நடைபெறும் இடம் பின்னர் அறிவிக்கப்படும்.

ரும் எதிர்வார்த்தை கூடக் கூறவில்லை.

அதே தலைவர்கள்தான், உத்தமர் காந்தியடிகளின் நினைவு நாளில், "அகிம்சா மார்க்கமே, நமது மார்க்கம்! அதுவே, உலகுய்யும் மார்க்கம்!" என்று இமயமுதல், குமரிவரை முழக்கியிருக்கின்றனர். இந்த அலங்கோலத்தைக் காணும்போது காந்தியடிகளின் சமாதி. வாயிருந்தால் ஓவென அலருதா! கண்கள் திறந்திருந்தால், துடித்து வடிக்காதா கண்ணீர்?

தூய்மை – சத்யம் – அன்பு —அகிம்சை, இதுவே 'சர்வோதயம்' என்கிறார், இந்திய குடியரசுத் தலைவர். அண்ணலின் வழி இதுவே—என்று ஆராதனை புரியாத தலைவர்களும் கிடையாது. எனினும், ஜம்னுதாஸ் பட்டேல் தீர்மானத்துக்கு எதிர்ப்பு, அதுவும், எப்படிப்பட்ட எதிர்ப்பு? நேரு, கடுமையாக எதிர்த்தாராம். அகிம்சா மார்க்க வீரர்—உலகத்தில் போரும் பூசலும் குருதிக் குளமும் ஏன் எனக் கூவும் வீரர், கடுமையாக எதிர்த்து, கைவிடச் செய்தாராம்.

காங்கிரஸ் தலைவர்கள் கரம் தூக்கி, ஆமோதித்தனராம்,

'ஜாலியன்வாலாபாக்' — கண்ட கட்சி, துப்பாக்கித் துரைத்தனத்துக்கு வக்காலத்து வாங்குகிறது.

குண்டடிபட்டு, கோர மரணம் அடைந்த 'தியாகிகள் தினம்' கொண்டாடும் கட்சி, குண்டுகளால் தான் கோலோச்சமுடியும் என நம்புகிறது.

எத்தனை பேர், சுட்டுக் கொல்லப்பட்டனர், வெள்ளையரால். அதனை எதிர்த்து என்னென்ன முழக்கம் செய்தனர், இவர்கள்—இப்போது, துப்பாக்கிவேண்டுமாம் —அப்போதுதான் துரைத்தனம் நடைபெறுமாம்.

"இதனை, யார் நம்புவது? துப்பாக்கி முழக்கம்கேட்காமலே அரசாளும் நாடுகளை நாம் பார்த்ததில்லை எனும் நினைப்பில் பேசுகிறாரா, இந்தப்பண்டிதர்? இந்தியாவில், ஏதாவது ஒரு நொண்டிச் சாக்கு கூறி துப்பாக்கிப் பிரயோகங்கள் அடிக்கடி நடக்கின்றன. பிரிட்டிஷார்கூட இப்படிச் செய்ததில்லை. துப்பாக்கிப் பிரயோகம் இல்லையென்றால் சர்க்கார் நடைபெறுவதே கஷ்டம் எனக்கருதுகின்றனர். இதைநான் உண்மையாக மறுக்கிறேன். 1919ல் ஆஸ்திரேலியாவில் கோபாவேசம் கொண்ட கூட்டம் நான்கு போலீஸ்காரர்களைக் கொன்றது. அப்போது கூட துப்பாக்கிப் பிரயோகம் நடைபெறவில்லை. இந்தியாவில் தான் மனித உயிரின் மதிப்பு மிகமிகக் குறைவாக மதிப்பிடப்படுகிறது. மக்கள் ஈக்கள்போல நடத்தப்படுகின்றனர்."

ஈக்கள்போல, நடத்தப்படுகின்றனர், என்கிறார் சோஷியலிஸ்டு தோழர் லோகியா! துப்பாக்கிப்பிரயோகம் இல்லாமல் ஏன் நடத்த முடியாது சர்க்காரை? எனவும்கேட்கிறார்!

ஒரு அரசில், துப்பாக்கிப் பிரயோகம் நடைபெறவேண்டிய அளவுக்கு, மக்கள் மனம் எரிமலையாவதேன்?-என்பதே, விவாதத்துக்குரிய பிரச்னையாகும். அந்தப் பிரச்னையைத் தீர்த்திட கையாலாகாதோர், 'கனம்'களாக ஏனிருக்கவேண்டும்?-என்பது, சிந்தனைக்குரிய விஷயம். இதனை மறந்து, நேரு, துப்பாக்கி வேண்டும் துரைத்தனம் நடாத்த எனக்கோருகிறார்!

இந்தியாவைவிட, அரசியல் பிரபுக்கள் அதிகம் நிரம்பிய இடம், பிரிட்டன். அங்கே, இந்த எழுபது ஆண்டுக் காலத்தில், ஒரு தடவை கூட துப்பாக்கி வெடித்ததில்லையாம். துப்பாக்கியை, நேரு பரம்பரைக்குத் தந்துவிட்டுப் போன வெள்ளையன் நாட்டிலே—இந்த 70 ஆண்டுக் காலத்தில், ஒருமுறை கூட துப்பாக்கி வெடித்ததில்லையாம். ஆனால், பண்டித நேருவின். எழாண்டு ஆட்சியிலே, எத்தனை முறை துப்பாக்கிகள் வெடித்தது தெரியுமா? இதோ பாருங்கள் பட்டியலை:

1947-லிருந்து 1950-க்குள் மட்டும் 1872-தடவைகள் துப்பாக்கிகள் முழங்கின! இழந்த உயிர்கள் 3784! காயமடைந்தோர் 9342! இதில், குன்றத்தூரும், கல்லக்குடியும், தூத்துக்குடியும சேரவில்லை. அவைகளையெல்லாம் சேர்த்து, 1950-க்குப் பிறகு நடந்த துப்பாக்கிப்பிரயோகங்களையும் கணக்கெடுத்தால் நெஞ்சு பதறும்.

இது போதாதாம், இன்னும் வேட்டு முழககம் கேட்டுக்கொண்டிருக்கவேண்டுமாம்! 'காங்கிரஸ்' கேட்கிறது.

பட்டேல், கொண்டுவந்த தீர்மானத்தில், 'துப்பாக்கிப் பிரயோகம் கூடாது' என்றுகூடக் கூறவில்லை.

'நடைபெற்றதுபற்றி விசாரிக்க ஒரு நிரந்தரக் குழுவேண்டும்' என்பதுதான் தீர்மானம்.

இதற்குக் கண்களில், கனல்; குரலில், அனல்! கோபித்துக் கொண்டு சீறியிருக்கிறார், பண்டிதர்.

இந்த இலட்சணத்தில், குடியரசின் சாதனைகளைப்பற்றி கேளிக்கைகளும், உத்தமரின் நினைவுகுறித்து ஊர்வலமும் வேடிக்கைகளும்.

உண்மையில், இந்த மனத்துணிவு, யாருக்கும் வராது? திருடியவன் கூட, திருடிய வீட்டுப் பக்கம் செல்ல அஞ்சுவான்! காங்கிரஸ் தலைவர்களோ, காந்தியாரின் ஆசைகளை ஆழப் புதைத்தபடி, அவரது திருநாம பஜனையைச் சரிவரச்செய்கின்றனர்.

காந்தியார் உயிரோடிருந்திருந்தால், நிச்சயம், ஆவடியின் வாயிலில் படுத்துக்கொண்டு, 'அக்கிரமக்காரர்களே! துப்பாக்கியைத் தொடேன், என்று சத்யம் செய்து கொடுங்கள் இல்லையென்றால், என்னை மிதித்துத் துவைத்துக் கொண்டு நடந்து போங்கள்"

என்று சத்யாக்கிரகம் துவங்கியிருப்பார்.

சுடாமல், ஆட்சி நடத்த முடியாதாமே, இந்தச் சுதந்திர ரூபருக்கு.

மனித வேட்டையில்லாமல், சுயராஜ்யம் வாழமுடியதாமே, மோதலாலின் புதல்வருக்கு.

இந்த அழகில் — சமாதானத் தூதர் சமரசச் சின்னம், என்றெல்லாம், புகழ்மாலை! போற்றற்பாக்கள்.

அவருக்கு, துப்பாக்கியில்லாமல் துரைத்தனம் நடத்தமுடியாதாம். துணிவோடு தெரிவிக்கிறார்! அதே நேரத்தில், 'அன்பே என் வாழ்வு' என்று, குத்தும் வெட்டும் நடைபெற்ற நேரத்தில், 'நவகாளி' சென்ற உத்தமரின் பெயர் கூறி, விழாக்களும் நடத்துகின்றனர்.

முன்பும் செய்தனர் — ஆனால், செய்யும் கொடுமையைச் சரியெனச் சொல்லும் துணிவு இல்லாமலிருந்தது. இப்போது, அந்தத் துணிவு அபரிமிதமாக வந்துவிட்டது. அதனால், பகிரங்கமாகவே தெரிவிக்கிறார். துப்பாக்கி தேவை, சுயராஜ்யம் செய்ய—என்று. என்ன துணிவு —என்ன அக்கிரமம். இதனால் தான், அவரது சகோதரி கிருஷ்ணா, "என் அண்ணன் ஒரு சர்வாதிகாரி ஆகி வருகிறார்," என்று தெரிவித்தார் போலும்.

இந்த 'சர்வாதிகாரி'யின் போக்கையும், நெஞ்சுரத்தையும் காணும்போது, நிச்சயம் உண்மையான அகிம்சாவாதிகள், கண்ணீர் வடிக்கவேண்டும் — உத்தமரின் சமாதியினருகே நெருங்காதீர், அதனை மாசுபடுத்தாதீர், என இவர்களை எச்சரிக்கவேண்டும்.

ஆவடியில் நேரு பேசி வாரம் இரண்டாகிறது. ஒரு எதிர்ப்புக் குரல்கூட இல்லை! பூஜ்யர் எனப் போற்றப்படும் **வினோபாபாவே** போன்றோரின் மனதில், ஒரு துடிப்புக்கூட ஏற்படவில்லை! அவரவர்கள், அவரவர் சங்கு ஊதும் செயல், தடைபடாது நடந்தால் போதுமெனக் கருதுகின்றனர்—நேருவோ, சிரிப்பும் சிங்காரமும் கூத்தாட, பவனி வருகிறார்! பாராட்டிப் பேசவும் செய்கிறார், உத்தமர் காந்தியாரின் உபதேசங்களை!! விந்தையான நாடு, இது—மிகமிக விந்தையான பூமி, இது.

★

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

படும். இதிலிருந்து இச்செடி வெப்ப நிலை மாறுதல்களை உணரக்கூடியது என்று தெரிகிறது. இன்னும் சில பூக்கள் பகலில் மலர்ந்து விளங்குகின்றன, இரவில் குவிகின்றன.

சூரியனை நோக்கி நிற்கும் சூரிய காந்திப் பூவும், பூச்சி வந்து உட்கார்ந்தவுடன் சடேரென்று மூடிக்கொள்ளும் வீனஸ் பொறிச்செடி போன்ற மாமிச பட்சணிச் செடிகளும் உணர்ச்சி மிகுந்த செடிகள்.

செடிகளின் உணர்ச்சியைப் பற்றி அறிவியற் கலைஞர் ஜகதீஸ் சந்திரபோஸ் பல அரிய பரிசோதனைகள் நடத்தியிருக்கிறார். அவர் கண்டு வெளியிட்டிருக்கும் விவரங்கள் அற்புதமானவை. தாவரங்களுக்கும் நம்மைப்போலவே இருதயம் உண்டு என்ற நம்புதற்கரிய உண்மையை எடுத்துக்காட்டினார் போஸ். இதைப்பற்றி அவர் கூறுவதைப்பாருங்கள். 'இதுவரை நாம் மரங்களும் மற்ற தாவரங்களும் வாயற்றவைகளாதலால் நமக்குச் சம்மந்தமுள்ளவையல்ல என்றிருந்தோம். ஆனால் அவைகள் நம்மைப்போல் உணர்வு பெற்றிருக்கின்றன என்பதை காண்பிப்பேன்: ஏனென்றால், அவைகளால் உங்கள் வினாக்களுக்கு பதிலளிக்க முடியும். உதாரணமாகத் தொட்டால் சுருங்கிச் செடியை நாம் தொட்டால், தொடுவதின் அதிர்ச்சியினால் இலை மடங்கித்தொங்குகிறது. பலவித அதிர்ச்சிகளினால் இச்செடிக்கு என்னென்ன உணர்ச்சிகள் ஏற்படுகின்றன. அதிர்ச்சிகளைச் செடி எப்படி ஏற்றுக்கொள்கிறது என்பதை நாம் கண்டுபிடித்திருக்கும் சோதனைக் கருவியொன்றின்மூலம் அறியலாம். சூரிய வெளிச்சத்திலுள்ள ஊதா மேற் கதிர்கள் போன்ற நுண்ணிய ஒளிக்கதிர்களை நம்மால் பார்க்க முடியாது. ஆனால் ஒரு செடியினால் இவைகளைப் பார்க்க முடியும். இதைத்தவிர நமக்கு ரேடியோ சங்கீதம்கொண்டுவரும் ஈதர் அலைகளைக்கூட செடியினால் உணர முடியும்.

"ஒரு வேளை செடிகளுக்கு ஆறுவது அறிவு என்ற அபூர்வ உணர்வு ஒன்று இருக்குமோ என்றுகூட நினைக்கக் காரணமிருக்கிறது. நான் ஒரு சமயம் ஒரு செடியின் உணர்ச்சித்துடிப்பை சோதனைக் கருவியின்மூலம் நிர்ணயித்துக்கொண்டிருந்தேன். அந்தச் சமயத்தில் தற்செயலாகச் சில மனிதர்கள் அவ்விடத்துக்கருகில் வந்தார்கள். உடனே அச்செடியின் உணர்ச்சி துடிப்பில் மாறுதல் ஏற்பட்டதை சோதனைக் கருவி காட்டியது அம்மனிதர்கள் அப்பால் சென்ற பிறகு அச்செடி தன் முன்னைய நிலையை அடைந்தது. சாதாரணமாக ஒரு செடி அதிர்ச்சியிலிருந்து குணமடைவதற்குப் பன்னிரண்டு நிமிடங்கள் ஆகின்றன.

"செடிகளுக்கு இருதயங்கள் உண்டு. செடிகளின் உடலில் நீர் உயர்ந்துசெல்வது நம் உடலில் இருதயத்துடிப்பினால் இரத்த ஓட்டம் ஏற்படுவதை யொத்திருக்கிறது. அதாவது நீரின் அமுக்கம் ஒரே மாதிரியாக இல்லாமல் இருதயத்துடிப்பைப்போன்று விட்டு விட்டு உண்டாகிறது.

மேலும், போஸ் ஒரு செடிக்கு விஷம் கொடுத்து விஷத்தின் காரணமாகச் செடியில் ஏற்படும் துடிப்புக்களை சோதனைக் கருவியின் மூலம் பரிசோதித்தார். அந்தச் சோதனை முடிவுகளிலிருந்து விஷம் கொடுக்கப்பட்ட செடியின் துடிப்புக்கள் ஒரு பிராணி உயிருக்காக வருந்தித் துடிப்பதை யொத்திருப்பது புலப்பட்டதாம்.

## தார்த்தார் மதம்

தார்த்தார் வகும்பினர் பலநாடுகளில் படையெடுப்பும் கொலைகளும் நடத்தி, பயங்கரமானவர்கள் என்று பெயரெடுத்தவர்கள். குதிரை வீரர்கள், இவர்கள் காட்டுமிராண்டிக் கருத்துடன் இருந்தபோது கொண்டிருந்த மதத்தில் **மார்ஸ்** எனும் தேவனே மூலவர்,

இந்ததெய்வத்துக்கு இவர்கள் குதிரைகளை பலிகொடுத்து பூஜை செய்தனர்.

பிறகு, குதிரைகளை அடித்து ஓட்டும் **சவுக்குகளைத்** தெய்வமாகக் கொண்டு பூஜித்து வந்தனர்.

கிராமவாசிகள் **மாணிப்பா** எனும் தெய்வத்துக்குப் பூஜை செய்து வந்தனர்.

இந்த தெய்வத்துக்குத் தலைகள் ஒன்பது!!

செடிகளுக்குக் காயம் ஏற்படுவதினால் உண்டாகும் விளைவு ஆச்சரியமானது தொட்டால் சுருங்கிச் செடியின் இலையொன்றை வெட்டி எடுத்தால் வெட்டப்பட்டது ஒரே யொரு இலையானபோதிலும் அந்தச் செடி முழுவதற்கும் அதிர்ச்சி ஏற்பட்டு மற்றெல்லாப் பாகங்களுக்கும் பரவிக் கொஞ்ச நேரத்திற்கு எல்லா இலைகளுமே உணர்விழக்கின்றன. இங்கிலையிலிருந்து கொஞ்சங் கொஞ்சமாகக் குணமடைந்து மறுப்படியும் பழைய நிலையை அடைகின்றன. வெட்டப்பட்ட இலை உணர்வுக் கரைசலில் வைக்கப்பட்டால் இருபத்துநான்கு மணி நேரம் நிமிர்ந்து நல்ல நிலையிலிருக்கும்; ஆயினும் கடைசியில் சுருங்கி மடிந்துவிடும்.

ஆகவே உணர்வற்றவைபோல் தோற்றமளிக்கும் வாயற்ற தாவரங்கள் உண்மையில் மிருகங்களைப் போன்று உணர்ச்சியுள்ள உடலைப் பெற்றிருக்கின்றன என்பது தெளிவாகிறது.

★

## மெக்சிகோவில்!

தென் அமெரிக்க நாடாகிய மெக்சிகோவில், அஞ்ஞானம் குடிகொண்டிருந்தபோது மக்கள் நம்பிக் கிடந்த மதக் கோட்பாடு, விசித்திரமானது.

விட்ஜலி புட்ஜலி எனும் தேவன் ஆதியில் பட்கி உருவில், ஒரு மலைச் சிகரத்தில் உட்கார்ந்திருந்தான்.

அந்த இடம், பிறகு 'ஸ்தலம்' ஆயிற்று—மெக்சிகோ என்று தலத்துக்குப் பெயரிட்டனர்.

டியஸ் என்பவன் பயங்கரத் தேவன்.

இவனுக்கு பூலோகம் சிம்மாசனம்!

பூமிக்கு நரபலி இடுவது, தேவாலயங்களில் மண்டை ஓடுகளை மாலையாக்கிக் கட்டிவைப்பது, பாம்புகளை வளர்ப்பது — இவை மதக் கோட்பாடுகள்.

திருமணத்தின்போது தலையை மொட்டை அடித்துக்கொள்ள வேண்டும் என்பதும் மதக் கோட்பாடு.

இந்த மதத்தைச் கட்டிக் காக்க ஏராளமான பூசாரிகள் இருந்தனர்.

அவர்களின் செல்வாக்கும் அமோகம்.

ஆனால், எல்லாம், முன்பு! இப்போதல்ல!!

# போலிகள், ஜாக்ரதை!

ஜாக்ரதை!

போலிகள், ஜாக்ரதை!!

காவி உடையில்,

கமண்டலம் ஏந்தி,

ஈசனைப் பஜித்து,

ஈனத்தொழில் செய்யும்,

போலிகள், நாட்டில்!

பொதுமக்களே, உஷார்!!

•

"இந்து" ஏட்டில், இப்படியொரு விளம்பரம்! வெளியிட்டது, நாமல்ல; நம்மைச் சேர்ந்தவர்களுமல்ல.

விளம்பரம், மிகப்பெரிது! அவ்வளவு பெரிதாக வெளியிட, ஏது பணம், நமக்கு.

'பார்டர்' கட்டிப்போட்ட பணம் கொடுத்து, இவ்வண்ணம் பொதுமக்களுக்கு எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்.

இவர்களை நம்பி ஏமாறவேண்டாம்!

சன்யாசிக் கோலத்தில் வருவார்கள்.

மடாதிபதிகள் என்று சொல்லிக்கொள்வார்கள்.

மத விஷயம் ஏதும் அறியார்கள்.

தூய்மையில்லாத துஷ்டர்கள்

என்றெல்லாம் விளக்கி, அந்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. விபரமாக அவர்களை நம்பிவிட வேண்டாம்-நமஸ்கரித்து, காணிக்கை ஏதும் செலுத்தவேண்டாம். ஜாக்ரதை! ஜாக்ரதை!! — என்று, தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

✱

"சமூகத்திலிருக்கும் குழப்பமான நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டு, புதிதாக வந்த எனக்கு எதுவும் புரியாது என்று கருதி, எனக்கு முந்தியிருந்தவர் இறந்ததால் ஏற்பட்ட நிலைமையைச் சாதகமாக்கி இப்படிப்பட்டவர்கள், புறப்படத் துவங்கியிருக்கிறார்கள் என்பது இப்போதுதான் எனது பார்வைக்குக் கொண்டுவரப் பட்டது."

✱

இப்போதுதான்! எனது பார்வைக்கு!!—வாசகம், அரசாங்கத்தின் தலைவர்கள் கூறுவதுபோலிருக்கிறதே, என்று ஐயப்படுகிறீர்களா? அல்ல! அல்ல!! ஆச்சாரியாருக்குப் பிறகு, பீடம் ஏறிய காமராஜர், நாட்டின் மூலைமுடுக்குகளிலும் அடியார்கள் எனும் மதப்போர்வையில் உலவும் மனிதகுலச் சோம்பேறிகளை நம்பி ஏமாறவேண்டாம என நாட்டுக்கு விடுத்த எச்சரிக்கை அல்ல, இது!! அவருக்கு வருமா, இத்துணிச்சல்? வந்தாலும், இடம் தருமா, இந்து!

இந்த அறிவிப்பை வழங்கியவர், முதலில் நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறார்—மக்களுக்கு,

ஜாதி பேதமின்றி,

சம்பத்தில் நான் பதவிக்கு வந்ததைப் பாராட்டி,

பல்வகையில்,

பல வழிகளில்

எனக்கு வந்த பாராட்டுகளைக் காண மகிழ்கிறேன்.

என்று எல்லோருக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டு, பிறகு அறிவிக்கிறார் இந்த எச்சரிக்கையை!

ஜாதிமத பேதமின்றி அவர் பதவிக்கு வந்தமைக்காக வாழ்த்துக்கள் வந்ததாம்.

நன்றி—என்கிறார்.

அடுத்த வரியில், "சாரதா சந்திர மௌளீஸ்வர ரத்ன கர்ப்ப கணபதியின் அருள் உங்களுக்கெல்லாம் சித்திக்குமாக" என்று வாழ்த்துகிறார்.

பிறகு, எச்சரிக்கை வழங்குகிறார் ஏமாறுநீர்கள், ஜாக்ரதையென்று!

யார் என்று அறியத் துடிப்பீர்கள். ஆச்சரியமடையாதீர்கள், "மகா சமஸ்தானம் ஸ்ரீமத் ஜகத்குரு சங்கராச்சார்ய சாரதா ஆதிபீட சிருங்கேரி மடத்து" ஆதிபதிதான், இவ்வண்ணம் அறிவிப்புச் செய்திருக்கிறார்.

### பரிசு

காங்கிரஸ் தலைவர் தேபருக்கு, சௌராட்டிர மக்கள் நான்கு லட்சம் ரூபாய்களை நிதியாக அளித்திருக்கின்றனர்.

### ஏ! அப்பா!

உலக ஜனத் தொகையில் நூறில் ஆறுபங்கு மக்களை ஆள்கிறது, அமெரிக்கா.

ஆனால் உலக வருமானத்தில் நூறில் நாற்பது பங்கு அமெரிக்காவுக்குச் சேருகிறது.

ஆற்றில் வீழ்ந்து இறந்தாரல்லவா, ஒரு ஆதிபதி, அவருக்குப் பிறகு பரமஹம்ச பரிவிராஜகாசார்ய குரு பரம்பர பிரதாப வித்யாரண்ய மகாராஜாதிதான கர்னாடக சிம்மாசன பிரதீஷ்டா பானுசார்யவார்ய ராஜாதி ராஜ துங்க பத்ரதீரவாசி''யாக பீடம் ஏறியவரின் சார்பில் ஜனவரி 4ந் தேதிய இதழ் முதல் பக்கத்தில் சீனிவாசன் என்பாரின் பெயரிட்டு, இவ்விதம் விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது.

பழையவர் 'இறந்து' புதியவர் 'பீடத்துக்கு' வந்த "குழப்பமான" நிலையைச் சாதகமாக்கிக்கொண்டு, இப்படிப் பல சன்யாசிகள் கிளம்பியிருக்கின்றனராம்!

தாங்களே, தனுதன தர்மக் காவலர்கள் என்று சொல்லிக்கொண்டு பக்த கோடிகளிடம் வலம் வருகின்றனராம்.

அவர்களைக் கண்டு ஏமாறுதீர் — ஆராதனை தீபம் முதலியவைகளைச் செய்யாதீர்—காணிக்கை கைங்கரியங்களைச் செய்யாதீர்!—என்று, எச்சரிக்கும் வகையில், இப்படியொரு விளம்பரம் வெளியிடப்பட்டிருக்கிறது.

ஜகத்குருவல்லவா? ஆண்டவனின் அடியார்கள் இப்படியெல்லாம் மோசம் போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது, அவர் பொறுப்பல்லவா?—அதனுல்தான் இப்படி, மக்களுக்கு ஒரு எச்சரிக்கை விடுத்திருப்பார் என்று எண்ணக் கூடும்.

இது அல்ல, முக்யம்! இந்த அறிவிப்பின் மூலம், அவர் நிலைநாட்டிக் கொள்ள விரும்பும் விஷயம்.

"காலஞ்சென்ற ஜகத்குரு ஜீக்கு ஒரே ஒரு வாரிசுதான் உண்டு. அவர், இவர் ஒருவா மட்டுமேதான்! என்பதை, எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டும்"

ஒரே ஒரு வாரிசுதான் உண்டாம். அது, நான்தான்! — என்று கூறிக் கொள்வதே, விளம்பரத்தின் நோக்கம்.

அதனுல், பிறரை எச்சரிக்கிருர்.

பக்த கோடிகளே! பலரை நாடிச் சென்று வணங்கவேண்டாம். நான் தான் வாரிசு! அவர்களல்ல! ஆகவே, அவர்களை நாடவேண்டாம்-அவர்கள் போலிகள்! தூய்மையில்லாதவர்கள், சனுதனம் அறியாச் சண்டாளர்கள்! தாங்கள்தான் ஜகத்குருவின் பரம் பரையெனச் சொல்லிக்கொள்வது. தவறு. நான், ஒருவனேதான் வாரிசு! —என, புட்டுப்புட்டுச் சொல்லி, நிலைமையை விளக்குகிருர்.

எப்படி, அடியாரின், செயல்! ஈசனை நாடி துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனம் செய்யச் சொல்லவில்லை! 'இந்து'வை நாடி, விளம்பரம் போடுகிருர்!!

இதுவரையில், நாம் பார்த்தது உண்டு, "போலிகள் ஜாக்ரதை! லேபிளைப் பார்த்து சரக்கு வாங்கவும்" என்று வியாபாரிகள் போடும் விளம்பரங்களை. இப்போது, மோட்சலோகம் காட்டும் ஜகத் குருவும், விளம்பரம் போடுகிருர் — வீணர்களை நம்பவேண்டாம், அசல் வாரிசு நான்தான் என்று.

அவ்வளவு அச்சமும், அவசரமும் அடியாரை வாட்டிப் படைப்பதேன்? 'இந்து'வை நாடி, இப்படியோர் எச்சரிக்கை செய்யவேண்டிய நெருக்கடி ஏற்பாடு செய்வானேன்?

இகலோகம் துறந்து பரமனை நாட சன்யாசிகளையும் சந்நிதானங்களையும் நாடும் பக்தகோடிகள், உள்ளத் தூய்மையுடன் பரமனைப் பஜித்தால், ஆண்டவன் காதில் விழாமலா போய் விடும் — அதிலும், அங்கிங்கெனுதபடி எங்கும் நிறை ஜோதியாய் விளங்கும் ஆண்டவன் காதில்! தனது பக்தர்களை ஏமாற்றிடும் எத்தர்களுக்கும், ஈசன் தண்டனை அளிக்காமலா போய்விடுவான்? இவருக்கேன் அச்சமும் அவசரமும்?

ஆண்டவனின், வழிநாடும் பக்தர்களுக்குப் பாதைகாட்டும் நோக்கமா? அல்லது, தனக்கு செல்வாக்கு வரவேண்டும் — பிறரை நாடிப்போய் விடாதீர்—என்று விளம்பரம் செய்து கொள்ளும் எண்ணமா?

பெருங்காயம் அல்ல அவர்; போலி, இது என்று விளம்பரம் செய்ய! பீடாதிபதி — அதிலும் ஜகத்குரு — அவரா, அதுவும் நீசபாஷையான வெள்ளையன் பாஷையில் விளம்பரம் செய்ய வேண்டும்!

இவ்வளவு நெருக்கடியான நிலைக்கு, ஆளாகலாமா, ஜகத்குரு!! ஏனிப்படி, பக்தர்களைப் பார்த்து, "போலிகள் அவை; நான் இதோ," என்று விளம்பரம் செய்யவேண்டும்.

கேட்கத்தான் விரும்புவர், மக்கள். என்ன பதில் சொல்வரோ. ஈசனடியார்களெனப் பிரசங்கம் பொழியும் பெம்மான்கள் !!

★

### அங்கே

கடந்த ஆண்டில் தனிப்பட்ட முதலாளிகள் வசமிருந்த 700 ஸ்தாபனங்கள், சர்க்காரின் மேற்பார்வையில் வந்துள்ளன. பெரிய பஞ்சாலைகள், ரப்பர் தொழிற்சாலைகள், மாவுமில்கள், மருந்து தயாரிப்பு நிலையங்கள், முதலியவைகளும் இருக்கின்றன இந்த 700ல். இதுபோல இதுவரை சர்க்காரின் மேற்பார்வைக்குக் கீழ் 1700ஸ்தாபனங்கள் கொண்டு வரப்பட்டுள்ளனவாம். எங்கு தெரியுமா? புதிய சீனுவில்!!

## படகும் ரயிலும்

சுமார் 97 வருஷங்களுக்குமுன் கவி ரவீந்திரநாத் டாகூரின் தந்தையாரான தேவேந்திரநாத் டாகூர் ஒரு தடவை கல்கத்தாவிலிருந்து காசிக்குப் புறப்பட்டார். அவர் படகில் பயணம் செய்யவேண்டியதாக இருந்தது —அவர் இருந்த பிரதேசத்துக்கு இன்னும் ரயில் வரவில்லை— அந்த சொற்ப தூரத்துக்கு அவர் 100 ரூபாய் படகுக் கூலி கொடுத்து, ஒன்றரை மாதம் பிரயாணம் செய்தபின், காசிபோய்ச் சேர்ந்தார். அவர் மரணமடைவதற்குமுன் மற்றொரு முறையும் காசிக்குப் போனுர் — இந்தத் தடவை அவர் ரயிலில் சென்ருர் அதற்கு 15 மணி நேரம் கூடப் பிடிக்கவில்லை; முதல் வகுப்புக் கட்டணம் ரூ. 26-5-0 தான்; 3-ம் வகுப்புக் கட்டணம் ரூ. 6-9-0.

★

மாவட்ட போர்டு பணம்
மாநில சர்க்கார் பணம்
மத்ய சர்க்கார் பணம்

**இத்தனையும்,**

ஏராளமான போலீசுக்கு,
மந்திரிகளின் இட வசதிக்கு,
இரயில்வே ஸ்டேஷன் கட்ட,
ரோடுகள் போட,
இன்னும் பல வேலைகளுக்கு,

**செலவழிக்கப்பட்டு,**

அதிகாரிகளைப் பயன்படுத்தி,
சர்க்காரை ஒருநாள் மூடி,
சகல துறைகளையும்
பயன்படுத்தி

**நடந்திருக்கிறது, ஆவடி!**

**நடந்தது, கட்சி மாநாடு**

**அழிந்தது, வரிப்பணம்!**

**இது ஜனநாயகமா?**
**நேர்மையா?**

நல்லோரே! நீங்கள் கூறுங்கள்

**இது முறையா?**
**நீதியா? சரிதானா?**

2-ம் பக்கத் தொடர்ச்சி

காமராஜ் யாராரிடம் பணம் வாங்கினார் என்பது தெரியாதா நேருவுக்கு!! தெரியும்-நன்றாகவே தெரியும்-ஆயினும், மாநாடு கலையும், போது, நேருவின் மனக்கண் முன்பு கோபுரம் தெரிந்ததே யொழிய அதற்குப்பூசப்பட்ட வர்ணம் ஏழையின் ரத்தம் என்று தெரியவில்லை! அலங்காரங்கள் தெரிந்தனவே யொழிய, அதற்காகச்செலவிடப்பட்ட பணம், எத்தனை பேரைக் கசக்கிப் பிழிந்து எடுத்தது என்கிற உண்மை தெரியவில்லை. அவரும் ஆனந்தத்தோடு-பரமானந்தத்தோடு-பாராட்டக்கூட வார்த்தையில்லை, என்று சொல்லி-மாநாடு நடத்தியவர்களைப் பாராட்டிவிட்டு போய்விட்டார்.

*

"சரி! அதனால், ஆவடி மாநாட்டின் விளைவாக, எதுவுமே கிடைக்கவில்லை என்கிறாயோ? காங்கிரசுக்கு உன் கருத்துப்படி உருப்படியாக ஒன்றும் கிடைக்கவில்லை, யென்றே வைத்துக்கொள். ஆனால், தமிழ் நாட்டுக்குக் கூட எதுவும் கிடைக்கவில்லை யெனக்கூறாதே! தமிழர்கள் என்றால், எடுத்தனைச் சிறப்பாக முடிக்கும் தன்மை வாய்ந்தவர்கள் என்பதை இப்போதாவது, வடவர்தெரிந்துகொண்டிருப்பார்களல்லவா? தமிழருக்கு தமது மொழியின் மீதுள்ள பற்று எவ்வளவு என்பதை மாநாட்டின் ஒவ்வொரு மூலையிலும் தமிழருக்கு முதலிடம் கொடுத்து எழுதிவைத்திருந்தோமே. அதற்கு என்ன சொல்லுகிறாய்? சேரன்! சோழன்! பாண்டியன்! கட்டபொம்மன்! அவ்வை! அவர்களை யெல்லாம் சித்திரமாகத் தீட்டிவைத்திருந்தோமே?

*

நண்பரின், கடைசித்திருப்தி, இது! இதனாலாவது, நம்மைப் பாராட்டமாட்டார்களா, எனும் ஆவலில் கேட்கிறார். உண்மைதான் அன்பர் காமராஜ், அப்படித்தான் செய்தார்-வரவேற்பு வளைவுகளைக் கூடத் தமிழில் தான் எழுதச் செய்தார்.

'ஏ' கழகத்தாரே! எங்களுக்கில்லையோ, தமிழுணர்ச்சி?', என்று காட்டிடத்தான் செய்தார். ஆனால், அவர் கட்டிய கோட்டையை, வடவர் தமது செயல் மூலம் இடித்து தகர்த்துவிட்டனர்! இவைகளைக் கண்ட பம்பாய் முதல் மந்திரி மொரார்ஜி தேசாய் என்பார், கடுமையாகவே பேசினாராம், "இந்தியைப்பற்றி பலர் அலட்சியமாக எண்ணுவதை அடியோடு நிறுத்த வேண்டும். இனிமேல் எம்.எல்.ஏ.,க்களாக விரும்பும் ஒவ்வொருவரும் அவசியம் இந்தி தெரிந்தவர்களா என்று பார்த்து பொறுக்கவேண்டும்" என்பதாக. இது பலன்! என்ன செய்தாரோ, காமராஜர் அப்போது.

*

"சரி! ஒரு விஷயத்தையாவது நீ, ஒப்புக்கொள்ளவேண்டும் நீங்கள் அடிக்கடி சொல்லுகிற ஒரு விஷயத்தை, எங்கள் அம்புஜம்மாள் தனது வரவேற்புரையில் எடுத்துச் சொன்னாரே, அதைக்கூட மறுக்கிறாயா? அதற்காகவாவது, ஆவடி மாநாடு பயன்பட்டதே என்று அகமகிழ்ச்சிகொள்கிறாயா, இல்லையா?"

*

நண்பருக்குச் சிறிது மகிழ்ச்சி வரும் — நம்மை, மடக்கிவிட்டோம் எனும் எண்ணத்தில், மகிழ்ச்சிதான். அம்புஜம்மாள் அவர்கள் பயந்து பயந்து பேசிய அந்த வாசகத்தைக் காணும்போது. உண்மையில் மகிழவே செய்தோம். அகில இந்தியத் தலைவர்களைக் கூட்டிவைத்து, மந்திரிகளின் மத்தியில் "ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம், தென்னாட்டுக்குப் போதிய சலுகைகள் வழங்கப்படவில்லையென்று இங்கே ஒரு அபிப்பிராயம் இருந்து வருகிறது — சரியோ, தவறோ தெரியாது — என்றாலும் அதுபற்றியும் நீங்கள் கவனிக்க வேண்டும்" என்று பேசியது துணிச்சலான காரியம்தான்! இப்படி, அம்புஜம் அம்மாள் மட்டுமல்ல ஆச்சாரியார்—ஓமந்தூரார்—யாவருமே கூறியிருக்கின்றனர். முதலமைச்சர் பதவிக்குவந்த ஒவ்வொருவரும்—காமராஜரைத் தவிர—இதுபோல வெளிப்படையாகப் பேசாமலில்லை! காமராஜர், வாய் வார்த்தைகளைச் சிதறாமலிருப்பதிலும், எல்லோருக்கும் நல்லபிள்ளையாகக் காட்டிக்கொள்வதிலும் சமர்த்தர். அதனால், அவர், எதுவும் சொல்லவில்லை! ஆனால், இப்போது தனது 'அம்பு' ஆன அம்புஜம்மாளின் வரவேற்புரையின் மூலம், அதனை விளக்கியிருக்கிறார். அகமகிழ்ச்சிக்குரியதே. ஆனால், பலன்! இதோ!!

★ கூனூரில் இருந்த சத்துப்பொருள் ஆராய்ச்சிக்கழகத்தை ஐதராபாத்துக்கு மாற்ற இந்திய சர்க்கார் முடிவுசெய்திருக்கின்றனர்.

★ பங்களூரில் இருக்கும் பால் பண்ணை ஆராய்ச்சி நிலையத்தையும் பஞ்சாபுக்கு கொண்டுசெல்வதென முடிவு செய்திருக்கின்றனர்.

★ சிதம்பரம், திருவரங்கம், ராமேஸ்வரம், ஸ்ரீ வில்லிபுத்தூர், திருப்பதி முதலிய கோயில் நிர்வாகங்களையும் 'டில்லி' பார்வையிலே எடுத்துக்கொள்வதென முடிவு செய்திருக்கின்றனர்.

இத்தனைக்கும் மேலாக, ரஷ்ய நிபுணர்கள் உதவியோடு, ஏற்படுத்தப்படவிருக்கும் இரும்பாலையை எங்கள் சேலத்தில் அமைக்க வேண்டும்-ஏனெனில், அருகில் நெய்வேலி இருக்கிறது-என்று சேலம் தேசிய நண்பர்களும், சென்னை சர்க்காரும், தெண்டனிட்டு வேண்டினரல்லவா, அந்த ஆலையையும் பீஹாருக்கு அளிக்க 'டில்லி' முடிவுசெய்துவிட்டதாக, 'தினமணி' தெரிவிக்கிறது.

இப்போது என்ன சொல்வார், ஆவடிபற்றி அந்தாதி பாடும் நண்பர்? ஏடுகளில் பிரச்சாரம்! ஏனையோர் மயங்கக்கூடிய வகையில், ஏற்பாடுகள்!—எல்லாம் சரி. இதற்கு மக்களது வரிப்பணம் செலவழிந்ததும் சரி. கிடைத்தது என்ன? நாட்டுக்குக்கூட அல்ல; காங்கிரஸ் இயக்கம் இதனால் பெற்ற பலன் என்ன? ★

தொடர் சித்திரம்

# கடிகாரம்

11

அண்ணல்

“அடி பாவி! அங்கே உன் அப்பா சாகக் கிடக்கிறார்- நீ இங்கே வாய் பிளந்துகொண்டு நிற்கிறாயே!” என்று பக்கத்து வீட்டார், அப்போதுதானா என்னிடம் சொல்ல வேண்டும்? கதறியவண்ணம் ஓட்டம் எடுத்தேன். ஒரு நிமிடத்துக்கு முந்தி என் மனதில் உண்டான அத்தனை எண்ணங்களும் மறைந்துபோய், உலகமே இருள் காடாகிவிட்டதுபோலக் காட்சி அளித்தது. ‘பகவான் ஆசிரமத்திலிருந்து’ எப்படி வீட்டுக்கு வந்தேன் என்றுகூடத் தெரியாது. அவ்வளவு வேகமாக ஓடிவந்தேன். அந்த அவசரத்தில் வாயிலில் அடிக்கப்பட்டிருந்த முளையொன்று தடுக்கிவிட்டது. விழுந்தேன்; எழுந்தேன்; நெற்றியில் காயம். அது, எனக்குப் பெரிதாகத் தெரியவில்லை. ‘அப்பா, அப்பா!’ என்று அலறிக்கொண்டு உள்ளே ஓடினேன்.

அப்பா, படுக்கையில் கிடந்தார். அருகில்போய் கூப்பிட்டேன். ஐயோ—அதை எப்படிச் சொல்லுவேன்?—அப்பா போய்விட்டார். இறந்துபோய்விட்டார், எந்த மகளை சீரும் சிறப்பாக வாழவைப்பேன் என்று வளர்த்து, சீரழியும் காட்சியைக் கண்ணாலே பார்த்தாரோ, அந்த அப்பா — இந்த உலகில் எனக்கென இருந்த ஜீவன்—ஜெயமணியின் அரசியல் ஆவேசத்தால் அலங்கோலமான உயிர் — என் அப்பா இறந்து கிடந்தார், அங்கே. பாவி நான், சாகும்போதுகூட அவர் அருகிலிருக்கும் பாக்கியத்தைச் செய்யவில்லை. என்னென்ன நினைத்தாரோ? எப்படி எப்படி விழித்தாரோ? மகளே மகளே என்று அலறினாரோ? — என் அப்பா போய்விட்டார், கதறினேன், அப்பா அப்பா என்று அலறினேன். கட்டிப்பிடித்துக் கொண்டு அழுதேன்.

தலையில் பட்ட காயத்தால் சிந்திய இரத்தம், அப்பாவின் மேலே கிடந்த துணியிலெல்லாம் படிந்தது. அவருடைய இரத்தத்தால் பிறந்த நான், கடைசிக் காலத்தில் அந்த இரத்தத்தைத்தான் அவருக்குப் பூச முடிந்தது. என்ன செய்வேன்? ஐயயோ என்று கூவ மட்டுமே முடிந்தது. யார் இருக்கிறார்கள் எனக்கு? உற்றாரும் உறவினரும், அப்பா ‘வீட்டி’லிருந்து ‘குடிசை’க்கு வந்தது முதலே ஏதோ ஒரு காரணம் கூறிக்கொண்டு, வருவதையும் நிறுத்திவிட்டார்கள். இப்போது, எனக்கு யார் துணை? யாரிருக்கிறார்கள் எனக்கு, ஆறுதல் சொல்ல? கட்டிக்கொண்டு அழக்கூட துணையில்லாத நான், எப்படி என் அப்பாவை இடுகாட்டுக்குக் கொண்டுசெல்லப் போகிறேன். ஐயோ, என்ன செய்வேன், நான்? — கண் விழித்துப் பார்த்தபோது, யார் யாரோ எங்கள் குடிசையைச் சுற்றி நின்றனர். பார்த்தேன்; எங்கள் ஊர்க்காரர்கள்தான்.

உயிரோடு இருந்தபோது ஒரு சிறு உதவிகூட செய்தறியாதவர்கள், செத்த வீட்டிற்கு சிங்காரம் செய்ய வந்திருக்கிறார்கள். அப்பாவின் உடலை, இன்னும் அரை மணிக்குள் தகனம் செய்யவேண்டுமாம்—அனந்தராமய்யர் சொன்னாராம். பகவான் ஆசிரமத்துக்குக் குடிபோகும் நேரத்தில் ஊரில் அழுகுரல் கேட்கக்கூடாதாம்! ஜகத்குரு வேறு, ஊரில், ஊர்வலமாக வரப் போகிறாராம்!! அந்த நேரத்தில், பிணம்கூடாதாம். என் அப்பா, பிணமாம். உயிர்போன அந்த உடல் குடிசைக்குள் கிடப்பது கூடாதாம். என்னைக் கேட்காமலே, மூங்கில் தென்னை ஓலை முதலியவைகள் வந்துவிட்டன. அப்பாவைத் தூக்கி வைத்து, அவர்களே கொண்டுசென்றனர்.

பாவிகள்! இனி எப்போது பார்க்கப் போகிறேன், என் அப்பாவை? உயிர்போன அந்த உடலைப் பார்த்து வாய்விட்டுக் கதறவும், விடவில்லை, என்னை! “வருவேன். வருவேன், சுடுகாட்டுக்கு” என்று அலறினேன். பெண், சுடுகாட்டுக்குப் போவது, கூடாதாம்! ஊருக்கு கேடு வருமாம்! நாலைந்து பெண்கள் என்னைப் பிடித்துக் கொண்டனர், அப்பா, போகிறார்! அதோ, போய்விட்டார்! அதோ, புகை! அந்தப் புகை......ஐயோ......!ஐயோ......!! என் அப்பாவின் உடல், இன்னேரம், சாம்பலாகியிருக்கும்.

அனந்தர்ாமய்யர் வீட்டிலோ, பூபாள ராகத்தில், நாதசுர ஆலாபனை நடக்கிறது! பூகம்பமான, நான், இங்கே. பூபாளம், அங்கே. கெட்டி மேளச்சப்தம் கேட்கிறது அய்யர் வீட்டில்! வெட்டி வதைக்கும் வேதனையின் சின்னமாக, நான் இங்கே!!

அழுதேன்....... அழுதேன்....... அழுதுகொண்டேயிருந்தேன். இரவு வந்ததும் தெரியாது! எப்படி போயிற்றென்றும் தெரியாது!! ஒரே இருள் மயம். வெளியில் மட்டுமல்ல; மனதிலும்தான்.

அய்யர் வீட்டு ‘கிரகப்பிரவேசத்’ துக்காக வாணவேடிக்கைகள் நடக்கின்றன! என் மனதிலும்தான், எரிபொறிகள்! ஐயோ, அப்படியே என் உயிர் போய்விடக் கூடாதா? இனி, எனக்கு யார் துணை! எப்படி வாழப்போகிறேன், இங்கே!!

தூரத்தே, வீதி நாய் ஒன்று குரைத்துக்கொண்டிருந்தது, வேட்டுச் சப்தமும், வாண வேடிக்கையையும் கண்டு. ஆனால், நான்! அதைவிடக் கேடுகெட்டவளாக இருக்கிறேன். காலையில், இந்த உலகத்தில் எனக்கென்று, ஒரு உயிர் இருந்தது. இப்போது, யார்! யார்! எனக்கு —இப்படியே சுருண்டு கிடந்தேன், வீட்டில்.

தேற்றுவாரும் இல்லை! ஆற்றுவாரும் கிடையாது! யாராவது அப்படி வந்தால், அவர்களிடம் சொல்லியாவது மனதார அழுதிருப்பேன். அதற்குக்கூடகொடுத்து வைக்காத துர்ப்பாக்கியவதியாகிவிட்டேன்! மறு நாள், சுப்பி வந்தாள்—என்னைப் பார்த்துவிட்டு, அழுதாள். ஒரே ஒரு உயிர்! ஏழை உயிர்! பறையனுடைய பெண்சாதி! அவளுக்கிருக்கும் அன்புகூட, இவ்வளவு பெரிய ஊரில் யாருக்கும் இல்லையே. எங்கள் பண்ணையில், அப்பா நன்றாக வாழ்ந்தபோது,

அவளுக்கு அப்பா கொடுத்ததெல்லாம் அடியும் திட்டும்தான்! அவள், அழுகிறாள், அப்பாவின் சாவுக்காக! கேட்டபோது பணமும், அரிசியும், காய்கறியும் கொட்டிக்கொண்டுபோனவர் அனந்தராமய்யர். அவர், திரும்பவும் இல்லை! திரும்புவதா? சீக்கிரம் கொண்டு போய் கொளுத்தவும் சொன்னவர் அவர்தானே!

என்ன உலகம், இது. இரக்க சுபாவம், எங்கேயிருக்கிறது? ஏழைகள் வாழ்முடியாமல் வதங்கிச் சாவதுகூட இந்த இரக்கச்சுபாவத்தால்தானா! என்னைப்பார்த்து, மனதார வருத்தப்பட்டாள், சுப்பி. அவளைக்கட்டிக்கொண்டு அழவேண்டும்போலிருந்தது. "சுப்பி... சுப்பி...", என்று கதறினேன். இனிமேல், எனக்கு யார் இருக்கிறார்கள் சுப்பி...", என்று அழுதவாறு கூறினேன். "இனி இந்த உலகில் யாருக்காக உயிர்வாழவேண்டும்." சுப்பி!", என்றும் சொன்னேன். இதைக்கேட்டதாலோ, என்னவோ, அவள் இரண்டு நாட்கள் வரை என்னைவிட்டு எங்கும் அசையவில்லை; நகரவில்லை. பச்சிளங்குழந்தையைப் பக்கத்தில் போட்டுக்கொண்டு, கொட்டிலிலே கிடந்தாள். அவளுடைய புருஷன் தான் ஜயமணியின் அரசியலாட்டத்தின் விளைவாக, சிறையில்கிடக்கிறானே?

மூன்றும் நாள் இரவு, தூங்கிய சமயம் பார்த்து, உத்திரத்தையும் முழக்கயிறையும், தேடி உயிரைப் போக்கிக்கொள்ளலாமென்று. போட்டும் விட்டேன். ஆனால். சுப்பி வந்து காப்பாற்றிவிட்டாள். அவள், தூங்குவதுபோலிருந்தாளேயொழிய, தூங்கவில்லை. நான் இப்படி ஏதாவது செய்துகொள்வேன் என்பதை எதிர்பார்த்தபடியே இருந்தாளாம். அதைச் சொல்லியதோடு, "ஆச்சி மாரியாத்தா ஆணையா, நீங்க இப்படிச் செய்யறது இல்லேன்னு சொல்லுங்கோ," என்று என்னிடம் சத்தியமும் வாங்கிக்கொண்டாள்.

அந்த ஏழைக்குத்தான், மனதில் எவ்வளவு, அன்பு. அப்படியே, அவளைக் கட்டிக்கொண்டேன், "சுப்பி! எனக்கு இந்த உலகில் நீதான், அக்கா...அம்மா...அப்பா அண்ணன்...தம்பி... எல்லாம். சுப்பி! நீ, ஜாதியில் கெட்டவளாகயிருக்கலாம். ஆனால், நீ தெய்வம். மேல் ஜாதிக்காரர்களிடம் இல்லாத இரக்கம் இருக்கிறது, உன்னிடம். சுப்பி! சுப்பி!!", என்றெல்லாம், சொன்னேன்.

அந்த ஏழை, மிரண்டாள். "என்னைத்தொட்டுவிட்டீர்களே, ஆச்சி!", என்று அஞ்சினாள். நான் இனி யாருக்கும் அஞ்சவில்லை, சுப்பி. இனி, என்ன செய்யவேண்டுமென்று சொல்கிறாயோ அதன்படி நடக்கத்தயாராயிருக்கிறேன். நான் இந்த உலகிலிருந்து செய்யப்போகிற காரியம் எதுவும் இல்லை — அதனால், உனக்குக்கொடுத்த சத்யத்தை மீறிவிடுவேன் என்று பயப்படாதே. நிச்சயம், உயிர்வாழ்வேன்! எங்கள் குடும்பத்துக்கேற்பட்ட அழிவுக்குக்காரணமானவனின் போலி வேடத்தை மக்களுக்கு அம்பலமாக்கும் வரையில் உயிர்வாழ்வேன். உத்தமன் - உதாரன் - பக்திமான்-பகவத்நாமப்பிரியன்-என்றெல்லாம் போற்றுகிறாரே, சிங்காரமடத்து ஜகத்குரு, அவருக்குஅனந்தராமய்யர்யாரென்பதைச்சொல்லும் வரையில் உயிர்வாழ்வேன்!!-என்று வீராவேசத்துடன் அலறினேன்."

சுப்பி, என்க்குப் பைத்யம்பிடித்துவிட்டதோ என்று அஞ்சினாள். அவள் பயத்தைப்போக்க, நெடுநேரமாயிற்று! பிறகு, அவள் சொன்ன யோசனையின்படி, சுப்பியின் அண்ணன் இருந்த ஊருக்குச்சென்றோம். அவளுக்கும் அந்த ஊரில் வாழப்பிரியமில்லை! எனக்கும்தான்!! எனவே, இருவரும் கிளம்பினோம், **கீவளூருக்கு**.

அந்த ஊரில் அவளுடைய அண்ணன் இருந்தானாம். "அவனுக்கு என்ன வேலை, சுப்பி!" என்று கேட்டேன். 'அது, உடம்புவணங்கி ஒரு நாளும் வேலை செய்தது இல்லீங்க. நாடோடி. ஊர் ஊரா, அலையும்! கீழ் சாதியிலே பிறந்தோம்கிற நினைப்பே இல்லாமெ, மேல் சாதிக்

## போர் மூளாதிருக்க!

ஆப்பிரிக்காவில், பிரிட்டிஷ் பிடியில் உள்ள நயாசாலாந்து என்ற இடத்திலும், நில சீர்திருத்த ஏற்பாடு உருவாகிறது. உலகெங்கும் ஏற்பட்டிருக்கும் 'நிலப்பசி'யை ஓரளவுக்காவது திருப்திப்படுத்தாவிட்டால், பெரும் கொந்தளிப்பு மூண்டுவிடும் என்பதை உணர்ந்த பிரிட்டிஷ் அதிகாரிகள் நயாசாலாந்தில், 'நீதி' வழங்க முற்பட்டிருக்கின்றனர்!

இங்கு, நிலப்பிரபு, வெள்ளையன்.

பண்ணையாள், நீக்ரோ!!

நிலப்பிரபுவும் பண்ணையாளும், ஒரே இனமாக, ஒரே குலமாகக் கூட, இருக்கும் போதே, கொடுமையும் சுரண்டலும், தலைவிரித்தாடுகிறது.

இங்கோ நிறவெறி பிடித்த வெள்ளையன், நிலப்பிரபு; தாழ்ந்த இனம் என்று அவனால் கருதப்படும் நீக்ரோ, பண்ணையாள்.

கொடுமை எப்படி இருக்கும் என்பதைக் கூறவும் வேண்டுமா!

ஆப்பிரிக்கா எங்கும் ஏற்பட்டு, வெள்ளையரை பீதி அடையச் செய்திருக்கும், விழிப்புணர்ச்சி விடுதலைக் கிளர்ச்சி, நயாசாலாந்திலும் பரவிடாது இருக்க முடியுமா?

எனவே, நிலப்பிரபுக்களின் ஆதிக்கத்தை ஓரளவுக்கேனும் குறைத்து, வீறுகொண்டெழுந்துள்ள நீக்ரோக்களைச் சாந்தமடையச் செய்யலாம் என்று பிரிட்டிஷ் அதிகார வர்க்கம் கருதுகிறது.

இங்கு உள்ள பண்ணையாள் அமைப்பு முறைக்கு **டாங்காட்டா** என்று பெயர்.

இதனை இனி ஒழித்தாக வேண்டும் என்ற முடிவுக்கு பிரிட்டிஷ் அதிகாரிகள் வந்துள்ளனர்.

வெள்ளைநிறப் பிரபுக்களிடம் இப்போது 400,000 ஏகரா நிலம் சிக்கிக் கிடக்கிறது.

நிலப் பிரபுக்களிடம் கலந்து பேசி, நிலத்தை அவர்களிடமிருந்து சர்க்கார் வாங்கி, நீக்ரோ உழவர்களுக்கு அளிக்கவேண்டும் என்பதுதான் திட்டம்.

இந்த நில சீர்திருத்தம் நிறைவேற நீண்டகாலம் பிடிக்கும் என்ற முன்னுரையுடனேயே பிரிட்டிஷ் அதிகாரிகள் காரியத்தைத் துவக்கியுள்ளனர்!!

கரங்களாட்டம் வெள்ளை வேட்டி சட்டை போட்டுக்கிட்டே திரியும். அதனாலே, அதுக்கு கிராமவாசமே பிடிக்கிறது இல்லே, என் புருசனை ஜெயிலிலே புடிச்சு போட்ட சேதி கேள்விப்பட்டு, ஊருக்கு வந்துச்சு. அப்ப, கீவளூரிலே இருக்கிறதாச் சொல்லிச்சு. எதுக்கும், அங்கே போய்ப்பார்ப்போம்........" என்று தைரியமூட்டினாள்.

அதன்படி போனோம்! கொஞ்ச நாளைக்கு உயிர் வாழ, ஒரு வழி வேண்டும்—அதுக்கு, யோசனையும் சொன்னாள், சுப்பி—"ஆச்சி, நான் நடவுக்குப்போயோ, அறுவடைக்குப் போயோ எதாச்சும் கொண்டாரேன். நீங்க, ஒருவீடு எதிலாச்சும், ஒரு பாதியிலே குடியிருந்துக்குங்க. நெல்லு கொண்டாந்து தர்ரேன். எனக்கும் கொஞ்சம் சோறு போட்டுட்டு நீங்களும் சாப்பிடுங்க. மிச்சம் மீதியிருந்தது, இட்லி சுட்டுவித்தா, ஏதாவது கிடைக்காமலா போகப் போகுது" என்றாள்.

அதன் படி,- கீவளூருக்குப் போனோம். ரயிலடியைத் தாண்டித்தான், ஊருக்குள் போகவேண்டும், ரயில் 'கேட்' சாத்தியிருந்தது. குழந்தையை தோளில் சாத்தியபடி, நின்றுகொண்டிருந்தாள், சுப்பி. அவளருகில், நான் நின்றுகொண்டிருந்தேன்! கைகாட்டி தணிந்து ரயில் மெதுவாக வந்துகொண்டிருந்தது. நான் வேடிக்கை பார்த்தபடி நின்றிருந்தேன்; சுப்பியும்தான். அப்போது, எங்கிருந்தோ ஒரு குரல் 'சுப்பி! சுப்பி!' என்று கேட்டது. எங்கிருந்து—யார்—கூப்பிடுவது? — என்று விழித்தேன்! சுப்பி, "அதோ! அதோ!" என்று கைகாட்டினாள்.

ரயிலில் ஒரு உருவம்! அதற்குப் பக்கத்திலே இரண்டு போலீஸ்காரர்கள்! அந்த உருவம்தான் சுப்பியைக் கூப்பிட்டது.

சுப்பி, அந்த உருவத்தைக் கண்டதும் "அண்ணே! அண்ணே!" என்று கூவினாள். அந்த உருவமும், 'சுப்பி! சுப்பி!' என்று கத்திற்று.

ரயிலோ ஊர்ந்து போய்க்கொண்டிருந்தது. போலீஸ்காரர்கள் 'இரண்டு' வைத்து அந்த உருவத்தைப் பிடித்து உட்காரவைத்ததைப் பார்த்தேன். அதற்குள், என்னருகிலிருந்த சுப்பியோ, ரயிலை நோக்கி குழந்தையைத் தூக்கிக்கொண்டே 'அண்ணே! அண்ணே!' என்று, ஓடினாள்.

ஓடும் ரயில்; உள்ளே இவள் அண்ணன் விலங்குகளுடன்,

சுப்பியோ, குழந்தையுடன் ஓடுகிறாள். எனக்கு எதுவும் புரியவில்லை 'சுப்பி! சுப்பி!' என்று கத்தினேன்.

ஆ...! என்ன கோரமான காட்சி! அவள் தோளிலே இருந்த குழந்தை ஓடியவேகத்தில்......ஐயோ...! ரயிலுக்கடியில் விழுந்துவிட்டதே...... ஐயோ...! அவளையும்......! பயங்கரமான காட்சி! இரத்தம்—இரண்டு உயிர்—ரயில் நிற்கிறது—நான் மயக்கமாகிச் சாய்ந்தேன்; அலறிக்கொண்டே வீழ்ந்தேன். அபாக்கியவதி நான். ஒரு உண்மையான ஜீவனுக்கு ஏற்பட்ட கதி, எனக்கு வந்திருக்கக்கூடாதா? நான் ஏன் வாழ வேண்டும், உலகில்? என் கண் முன்னரா, சுப்பியையும் அவளது குழந்தையையும், ரயில் சக்கரங்கள் சக்கையாக்கவேண்டும்? என்னைப் போன்ற அபாக்கியவதி, யாருமே இருக்கமுடியாது....ஐயோ!...அடுக்காக, இன்னல்கள் மயக்கமடைந்த நான், விழித்துப் பார்த்தபோது, ஒரு வீட்டின் கட்டிலில் கிடப்பதாகத் தெரிந்துகொண்டேன்.

வழியில் போன யாரோ என்னைக் காப்பாற்றி அழைத்துவந்திருப்பதாகவும், அவர்கள் பேசிக்கொண்டதிலிருந்து தெரிந்துகொண்டேன். என்னைக் காப்பாற்றிய அவர்கள் யாரென்று பார்த்தபோது, எனக்குத் திகீரென்றது. அவர்கள் பேசிக்கொண்டதைக் கேட்கக் கேட்க, என் மனம் வேகமாக அடித்துக்கொண்டது.

(வளரும்)

# 'செண்ட்' ஸ்டேஷனில்!

"செண்ட்" வாசனை சிண்டைப் பிய்க்குமாம்!

எங்கு? இரயில்வே ஸ்டேஷன்களில்!

இரயில் நின்றதும்—ஒரு வண்டியிலிருந்து அந்த ஸ்டேஷன் முழுமைக்கும் 'செண்ட்' தெளிக்கப்படுமாம்.

ஒவ்வொரு ஸ்டேஷனுக்கும், ஒவ்வொரு ரக செண்டு—பூஞ்செடிக்கு நீர் தெளிப்பதுபோல, ஸ்டேஷனுக்குத் தெளிக்கப்படுமாம்!

பிரயாணிகள் பலர், புகார் செய்தனராம் — புழுக்கம் தாங்க முடியவில்லை; நாற்றம், குடலைப் பிய்க்கிறது, ஐயயே! என்றனராம். அதனால், இரயில்வே அதிகாரிகள், இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கின்றனர். ஒவ்வொரு இரயிலும் நிற்கும்போதும், முதலில் கோர்க்கப்பட்ட வண்டியிலிருந்து 'செண்டு' தெளிக்கப்படுமாம், 'ஸ்ப்ரே' மூலம். பிறகே பிரயாணிகள் இறங்குவராம்!

எங்கே, இது—என்று, ஆச்சரியத்தோடு கேட்பீர்கள்! உண்மை, தோழர்களே, உண்மை.

பாரிஸ் நகர ரயில்வே அதிகாரிகள் இவ்வண்ணம் செய்கின்றனராம். பூமிக்கு அடியில் அங்கு ரயில்கள் ஓடுகின்றனவல்லவா? — அதற்கு, பல ஸ்டேஷன்களும் உள்ளன; பூமிக்கு அடியில்தான்!!

ஆச்சரியப்படுகிறீர்களா— உண்மைதான்! பூமிக்கு அடியில் சென்ற வராக சாமியைக் கொண்டாடிக் கும்பிடும் நமக்கு, திகைப்பு ஏற்படத்தான் செய்யும். பாரிசார், வராகசாமியை அறியார்! வாழும் வகைகளை அறிவார்!! அதனால், ஜன நடமாட்டத்தைத் தவிர்க்க, பூமிக்குக் கீழே ரயில் ஓடுகிறது— அதற்கு ஆங்காங்கே, ஸ்டேஷன்களும் உண்டு.

அந்த ஸ்டேஷன்களில் நாற்றம் வராமலிருக்கத்தான், செண்டு! பாரிஸ் பட்டணத்தில், அப்படி! இங்கே!!

வயிற்று அழுக்கை வெளிப்படுத்தினால் கழுவ நீர், கிடையாது — வண்டியில்! கரப்பானும், மூட்டையும் நிரந்தரமாக வாழும்! மழை பெய்தால், உடல் நனையும்!! பல ஸ்டேஷன்களில், தண்ணீரும் கிடையாது—அமர இடமும் கிடையாது.

ஆனால், அடிக்கடி, ஒரு புரட்சி மட்டும் செய்யத் தவறுவதில்லை, அழகேசனைப் பெற்ற இலாகா!! ஒருவருடம் 'இன்டர் வகுப்பு' ஒழிக்கப்படும்—இன்னொருவருடம், 'முதல் வகுப்பு' அழிக்கப்படும்— அதன்படி இந்த ஆண்டில், 'இன்டர் வகுப்பு' 'இரண்டாம் வகுப்பாக' உயர்த்தப்படுமாம்!! இது, இங்கே.

அங்கோ, அது, நிலைமை.

Edited, Printed & Published by C N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95 Tirukkachinambi St, Kancheepuram.